

கிரிக்கட் உலகின் இன்னொரு மைல்கல்

Mar - Apr 2012



வாசகர்களின் இதயத் துடிப்பு

# அலை ஓசை

இதழ் 05

**FREE ISSUE**

## இலவசம்

*KAKI* வழங்கும்
அழகிய பாதணி

பக்கம் 18

UK Student Visa
ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

பக்கம் 9

வாசகர்கள்
அனைவருக்கும்
அலை ஓசையின்
இனிய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Contents


| | |
|---|---|
| Textile & Shoppings | 1 |
| Travel & Tours | 15, 21 |
| Printing | 20 |
| Jewelery | 20 |
| Business | 3, 25, 29, 36 |
| Science & Technology | 24 |
| Medical | 22, 30, 31 |
| Cargo Service | 13 |
| Education | 6, 9, 10, 11, 21, 37 |
| Entertainment Article | 4, 12, 14, 16, 26, 27, 32, 34 |
| Children's Creations | 18 |
| Electronics | 7 |



**ATA Aspirations (Pvt.) Ltd.**

No. 122/B, Galle Road, Dehiwala South,
Colombo, Sri Lanka.
Tel: 011 272 2990, 011 720 7989
Hotline: 077 687 4576
Email: info@ataaspirations.com
Web: www.ataaspirations.com


# அலை ஓசை

அழகான மலர்களெல்லாம் நல்வாசம் தருவதில்லை.
ஆனாலும் மகளிர் அவற்றைச் சூடாமல் விடுவதில்லை
அலைஓசை இதழ்கள் எல்லாம் நுகர்வோரின் விருப்புரிமை
ஆதனிலால் வர்த்தகர்கள் பெரும்வளத்துடனே திகழ்கின்றார்.

அலைஓசை இளமங்கை நுகர்வோரின் காதலியாள்.
வர்த்தகரின் உற்பத்தி அவள் அழகின் மூலதனம்
விளம்பரத்தால் தன்சேவைதனை உவந்தளிக்கும் நல்நங்கை
வாழ்க அவள் செயல் வெற்றி வாசகர்கள் திருப்தியுடன்

என்ன வளமில்லை அலை அடிக்கும் ஓசையிலே!
அழகான விளம்பரங்கள் கலாச்சாரக் கண்டனங்கள்
பெண்ணியச் சிறப்புரிமை தொழில்நுட்ப விளக்கங்கள்
மழலைகளின் ஆக்கங்கள் கவிதைகளின் அரங்கங்கள்
அள்ளிமாந்துவோம் அருகருகாய் கரம் கோர்த்து
பயனடைந்தோர் போற்றுவோம் புதுமை மலர வாழ்த்துவோம்.

சரா

# அடுத்தவர் அறிவும் ஆக்கபூர்வமானதே!!!!!

எமது வாசக நெஞ்சங்களுக்கு எமது உளப்பூர்வமான புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இவ்வருடமும் உங்களுக்கு சகல செல்வத்தாலும் மனஅமைதியை தரட்டும். எப்பொழுதும் சிந்தித்து செயற்படும் திறன் கிடைக்கட்டும் என அலைஓசை வாழ்த்தி நிற்கிறது.

இது அலைஓசையின் ஐந்தாவது இதழ். விளம்பர நோக்கம் மட்டும் கொண்ட ஒரு வியாபார சஞ்சிகையாக மட்டும் அலைஓசை வெளிவரவில்லை என்பது இச் சஞ்சிகையை வாசித்து பயன்பெற்ற பயனாளிகளுக்கு நிச்சயமாகப் புரிந்திருக்கும். இதுவே ஓசையின் வெற்றியும் கூட. வெற்றியென்பது ஒவ்வொரு முறையும் முதலிடத்தைப் பெறுவதென்று பொருளல்ல. வெற்றி பெற்றாய் என்றால் உன் செயற்பாடு சென்ற முறையை விட இம்முறை சிறப்பாக அமைந்துள்ளது என்று பொருள் அவ்வளவே.


ஒரு சிறந்த விளம்பரமானது விற்பனையில் எதிர்பாராத அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பது உறுதி. இதற்கு அவ் விளம்பரங்களால் தொடர்ந்து முன்னணியில் திகழும் சில நிறுவனங்களே சாட்சி. விளம்பரங்கள் சமூக யதார்த்தத்தின் கண்ணாடிகள் அல்ல. சமூகம் தான் விளம்பர யதார்த்தத்தின் கண்ணாடி. அத்தகைய விளம்பரமானது பண்பாட்டுக் கூறுகளுடன் நுட்பமாக உரையாடுகிறது. அதைக் கவனித்து அறியும் விளம்பர நிபுணர்களே வெற்றி பெறுகிறார்கள். இதனையே அலைஓசையும் செய்கிறது. எமது சொந்த ஆக்கங்களுக்கு அப்பால் அடுத்தவர் அறிவும் ஆக்கபூர்வமானதே என்பதால் தான் அலைஓசையானது தேடற்கரிய விடயங்களை தனது வாசகர்களுக்காக இணையங்களில் கூட தேடி இங்கு பகிர்ந்துள்ளது.

அலைஓசையானது எல்லா வகையினருக்கும் ஏற்ற வகையில் எல்லாப் பகுதிகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு சஞ்சிகை. அறிவுபூர்வமாகவும் கலைநுட்பத்துடனும் உருவாக்கப்பட்ட் விளம்பரங்களைத் தாங்கியுள்ள சஞ்சிகை. எனவே இதன் பயன் உரியவர்களைச் சென்றடையும் போது தான் அதன் பயன் இரட்டிப்பாகிறது. எனவே ஆக்கபூர்வமான ஆக்கங்கள் வரவேற்கப்படும் அதேவேளை விளம்பரத்தின் பயனை உணர்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களும் வரவேற்கப்படுகின்றன. இதுவே அலைஓசையின் எதிர்பார்ப்பு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இளைய தலைமுறையினரின்
இதயம் கவர்ந்த பரிசுப்பொருட்கள்
அனைத்தும் உங்களுக்காக
ஒரே இடத்தில்

the collection of western
fancy for youth

No. 14, Ramanathan Road,
Parameswara Junction, Thurunelvely.
Tel: 077 8357928, 077 5178097




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

**நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் இதை யாரும் மறுக்க முடியாது. இதை அனுபவத்தில் உணர்ந்தவர்கள் பலர். இப்படி ஒரு நல்ல குடும்பம் தனக்கு அமையவில்லையே என மறுக்கும் உள்ளங்களும் இல்லாமல் இல்லை.**

மனித இனத்துக்கு முக்கியமான சந்தோஷம் நல்ல குடும்பச் சூழல்தான். கைநிறைய சம்பாதிக்கும் பலரும் ஏங்குவது அன்புக்குத்தானே! கொடுக்க கொடுக்க ஆனந்தம் தருவது அன்பு. இனிமையான கதகதப்பான குடும்பச் சூழல் இந்த ஏக்கத்தை நிவர்த்தி செய்துவிடும். நம்பிக்கை, புரிந்துகொள்ளல், கருணை ஆகியவற்றை அள்ளித்தரும். சொர்க்கத்தை இறந்த பின் தான் அடைய வேண்டும் எனும் ஏக்கம் இல்லாமல் வாழும் வீடே சொர்க்கமாகி பிரச்சனைகள் எதுவந்தாலும் சுமூகமாக தீர்க்க வழி கொடுக்கும். இப்படிப்பட்ட சூழலில் வளரும் குழந்தைளின் வளர்ச்சி அளவிட முடியாமல் அதீதமாகவே இருக்கும்.

## பெற்றோரின் பங்கு

கணவன் - மனைவி வாழும் வாழ்க்கையின் பூரணம் அவர்கள் அன்பால் பிறந்த குழந்தைதான்.

குழந்தையை பெற்றால் மட்டும் போதாது. பிள்ளையை முறையாக வளர்க்க மனம் இருந்தால் மட்டுமே குழந்தை பெற்றுக்கொள்வது நலம். தன் காலில் நின்று முன்னேறும் விதமாகவும், பொறுப்புள்ள குடிமகனாகவும் குழந்தையை வளர்க்கும் மிகப் பெரிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது.

சொத்து கொடுக்கிறோமோ இல்லையோ அன்பையும், கல்வியையும் கொடுத்தால் போதும். அதீத அன்பு ஆளையே அழித்துவிடும். கவனம் தேவை. அன்பு என்றால் தன்னலமற்ற அம்மாவின் அன்பைத்தானே அனைவரும் சொல்வோம்.

அன்னைதான் குழந்தையின் முதல் ஆசிரியை. இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் பிள்ளை மேல் இருக்கும் அதீத பாசத்தினால் சில அம்மாக்கள் கண்டிப்பு இல்லாமல், தகப்பனிடமும் சொல்லாமல் பொத்தி பொத்தி வளர்த்து கெடுத்து விடுவார்கள். கணவனும் மனைவியும் நன்கு புரிந்து பேசி குழந்தை வளர்ப்பில் ஈடுபட வேண்டும்.

அன்னையின் அன்பு, தந்தை கற்றுக்கொடுக்கும் உலக அறிவு இரண்டும் முறையாக சரியாக குழந்தைக்கு கிடைத்தால் அதன் வளர்ச்சி மேல் சந்தேகமே வேண்டாம்.

அன்னை, தந்தை இருவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். நல்லது கெட்டது சொல்லிக்கொடுப்பது, ஒழுங்கு நடவடிக்கைகளின் வரைமுறைகள், அன்பு என கலந்து வளர்க்க வேண்டும்.

## பெற்றோர் – குழந்தை உறவு முறை

தனக்கு கிடைக்காததும் தன் பிள்ளைக்கு கிடைக்க வேண்டும் என் நினைப்பவர்கள் தான் பெற்றோர்கள். சிறு குழந்தையில் இருந்து வளர்ந்து வருபவர்கள். அதுவரை தன் பெற்றோர்கள் தான் உலகம் என நினைத்து, மகிழ்ந்து, பிரமித்து பார்த்து வந்த பிள்ளை பதின்ம வயதில் மாறிப்போவதேன்????

காரணம் வேறொன்றும் பெரிதாக இல்லை. தனக்கான அடையாளத்தை எதிர்பார்க்கும் வயது இது. பெற்றோரை விட்டு ஓடிப்போய் தன் அடையாளத்தை காட்ட வேண்டும் என நினைப்பார்கள். ஆனால் அவர்களை சார்ந்திருப்பது இதற்கு தடையாக இருப்பதாக நினைப்பார்கள். தனது நண்பர்களையே அதிகம் சார்ந்து இருப்பார்கள்.

அப்பாவைவிட அம்மாக்கள்தான் பதின்மவயது பிள்ளைகளுக்கு வில்லிகளாகத் தெரிவார்கள். தகப்பன் வேலைப்பளு, பிள்ளைகளின் எதிர்காலம் என ஓடிக்கொண்டிருப்பவர். தாயோ பக்கத்திலேயே
இருந்து அணு அணுவாக வளர்ச்சியை பார்ப்பவள். சின்ன அசைவும் சந்தேகத்தைத் தந்து தாயை அலர்ட்டாக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சில சமயம் பிள்ளைகள் தவறு செய்யும் பொழுது, இதை அப்பாவிடம் சொல்ல வேண்டாம் என்பார்கள் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருதலை கொள்ளி எறும்பாகி கடைசியில் கணவனிடம் சொல்லிவிடுவாள். பிள்ளை கடுப்பாகி விலக ஆரம்பிக்கும். சொல்லாமல் போனால் கணவன் மனைவி உறவுக்குள் விரிசல் வந்துவிடும் என அந்தக் குழந்தைக்கு தெரியாது!!

தவிர அம்மாவிடம் அதிகம் பிரச்சனையாக காரணம் நண்பர்கள், பாடங்கள், ஹோம் வொர்க்குகள், டிவி அதிகம் பார்த்தல், அறையை, வீட்டை சுத்தமாக வைக்கச் சொல்லுதல் போன்ற சின்ன சின்ன விஷயங்கள் தான். அரசியல் போல பெரிய பெரிய பிரச்சனை இல்லை. அருகில் அமர்த்தி பேசி புரிய வைக்க வேண்டும்.

உண்மைச் சம்பவம் ஒன்று 6 மாதங்கள் முன்பு குமாரின் மதிப்பெண்கள் கொஞ்சம் குறைய ஆரம்பித்தது. மதிப்பெண் குறைந்தால் அடித்துத் திட்டுவதை விட பிள்ளைகளுடன் உட்கார்ந்து எங்கே தவறு நடக்கிறது? என ஆராய்ந்து அதை முன்னேற்ற வழி சொல்வது அவன் தாயின் பாணி.

காரணம் கேட்ட பொழுது அவன் சொன்னது, என் நண்பர்கள் கீழே விளையாடுகிறார்கள், நானும் விளையாட வேண்டும். அப்பொழுதுதான் படிப்பேன் என்றார். வெள்ளிக்கிழமை – ஞாயிற்றுக்கிழமை வெளியே விளையாட அவன் தாய் அனுப்புவார். மற்ற நாட்களில் யோகா, தியானம் என அவரே செல்லிக்கொடுப்பது வழக்கம். இரண்டு நாள் குமார் அவர் சகோதரி இருவர் மட்டும் பார்க்குக்கு சென்று விளையாடுவார்கள். விளையாட்டு, பிறருடன் கலத்தல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மற்ற விஷயங்களும். அனுப்ப மாட்டேன் என்றால் பிடிவாதம் அதிகமாகும். குறிப்பிட்ட நேரத்தில் வீட்டுக்கு வந்துவிட வேண்டும் எனும் கண்டிஷனுடன் தினமும் விளையாட அனுப்பினார்.

யோகா, தியானம், வகுப்புக்கள் நடக்கவில்லை. பரீட்சைகள் முடிந்து மதிப்பெண்கள் பார்த்தால் இன்னும் குறைந்து விட்டது. அனுப்பினால் படித்து மதிப்பெண்கள் எடுப்பாய் என்றாயே! இப்போது என்னாச்சு? எனக் கேட்டேன். பதிலே இல்லை. இப்பொழுது என் சொல்படி கேட்டே ஆக வேண்டும்! உன் வழியில் சென்றதில் பலனில்லை. என் வழியில் வந்தால் விளையாட்டு, படிப்பு மற்றும் மற்ற கலைகளுக்கும் நேரம் இருக்கிறது. என்றதும் யோசித்து ஒத்துக்கொண்டான். மதிப்பெண் நல்ல படியாக வந்தது. இப்போது அந்த தாயும் பிள்ளையும் சந்தோஷம்.

விட்டு பிடிப்பது என்னும் டெக்னிக் தான். இது அதிகம் விட்டு விடாமல் கொஞ்சம் கயிறை தன்னிடமும் வைத்துக்கொண்டு இருக்கவேண்டும். பலன் கிடைத்தது. இந்த டெக்னிக் தான் பதின்மவயதுக்கு ஒத்துவரும். அவர்கள் வழியிலேயே போய் அவர்களை மாற்றுவது.
மதிப்பெண் பற்றி பேசும்பொழுது வகுப்பில் முதல் மதிப்பெண், எல்லாவற்றிலும் 90 க்கு மேல்தான் வரவேண்டும் என அடம் பிடிக்க மாட்டேன். மனனம் செய்து 100 வாங்குவதை விட புரிந்து 75 வாங்கினாலும் சந்தோஷம். சின்ன சின்ன பாராட்டுக்கள் மிக முக்கியம்.

## உடன்பிறப்புக்களுடனான உறவுமுறை:

நண்பர்களுடன் தினம் விளையாடினாலும் குமாரும் அவன் சகோதரி இருவரும் மட்டும் சில சமயம் தனியாக விளையாட வேண்டும் என செல்லியிருக்கிறேன். காரணம் அண்ணன் தங்கையின் உறவு பலப்படும். வயது ஏற ஏற உடன்பிறந்தவர்களுடன் உறவில் கொஞ்சம் விரிசல் விழும். அதிலும் அதிக வயது வித்தியாசம் இருந்தால் ரொம்ப கஷ்டம்.

ஒருவருக்கு மட்டும் அதிக அன்பு கிடைப்பதாக மற்ற பிள்ளை நினைப்பது, அவர்களுக்குள் அடிக்கடி நடக்கும் சண்டைகள், பொறாமை ஆகியவை இடைவெளியை கொடுக்கிறது. பெற்றோர்கள் இருவரிடம் எப்படி நடக்கிறார்கள் என்பதை பொறுத்தும் இது அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி



சுனாமி என்ற வார்த்தை ஜப்பான் மொழியிலிருந்து தான் வந்தது. சு என்றால் துறைமுகம், னாமி என்றால் பேரலை என்று பெயர். சுனாமி என்பது துறைமுகப் பேரலை கடலுக்கு அடியில் ஏற்படும் நில நடுக்கத்தால் நீர் உந்தப்பட்டு மிகப்பெரிய அலைகள் ஏற்படுகின்றன. இது கரையைத் தாண்டி சேதத்தை ஏற்படுத்துவதை சுனாமி என்கிறோம்.

கடலுக்கு அடியில் இருக்கும் பூமியின் கடினமான மேற்பகுதி நிலநடுக்கத்தால் ஆட்டம் காண்கிறது. இதனால் ஏற்படும் மிகப்பெரும் விசையின் காரணமாக நீர் தரைப்பகுதிக்கு வந்து மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்துகிறது. சுனாமியின் வேகம் மிகவும் பயங்கரமானது.

நிலநடுக்கம் ஏற்படும் அளவை பொறுத்து இதன் வேகம் பலமடங்கு அதிகரிக்கும். சில மணி நேரங்களிலேயே மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தும் வல்லமை சுனாமிக்கு உண்டு. சிறிய உயரமுடைய அலைகள், சுனாமியால் பெரிய அலைகளாக மாறுகின்றன. சுனாமி ஏற்படும் போது கடற்கரையில், அலையின் உயரம் நிலநடுக்கத்தின் அளவுக்கு ஏற்ப இருக்கும். கரையில் இருந்து அதன் உயரத்துக்கு ஏற்ப கடல் நீர், தரைப்பகுதிக்குள் ஊடுருவும் பின், இந்தப் பெரிய அலைகள் தரையில் பரவிய இடத்துக்கு பின்னே, தொடர்ந்து நீர் அலைகள் வேகமாக முன்னேறிக் கொண்டே இருக்கும். சுனாமி அலைகளின் உயரத்துக்கு ஏற்ப அதன் சேதம் இருக்கும். இப்படி கடல்நீர் சுனாமி அலையின் மூலம் இடம் பெயர்வதால், முன்னர் நிலப்பகுதியாக இருந்தவை நீராகவும், நீர்பகுதி நிலமாகவும் மாற வாய்ப்புண்டு.


கடற்பகுதிக்கு கீழ், கண்ணுக்குத் தெரியாத சிறிய வடிவத்தில் சுனாமி உருவாகும். கடலின் மேல் பகுதியில் இருக்கும் கப்பலில் கூட, சுனாமி உருவாவதை உணர முடியாது. ஆனால், அடுத்த சில சிமிடங்களிலேயே, இந்த சுனாமி மிகப்பெரிய அளவில் உருவாகி, கடல் பரப்பு முழுவதும் வேகமாக பரவும்.

சுனாமி என்பது ஒரே ஒரு அலையால் மட்டும் ஏற்படுவது அல்ல. அடுக்கடுக்கான பல அலைக–ளால் உருவாகும். இந்த அலைகள், கடற்பரப்பு முழுவதும் பரவி, கரையை நோக்கி, மணிக்கு 1,000 கி.மீ., வேகத்தில் சீறிப்பாய்ந்து செல்லும். இந்த அலைகளின் வேகம். ஜெட் விமானத்தின் வேகத்துக்கு சமமானதாக, சில சமயத்தில் கூடுதலாக கருதப்படுகிறது.

சுனாமி அலைகள் கரையை நோக்கி அதிவேகமாக சீறிப் பாய்ந்து செல்லும்போது, கடலுக்குள் இருந்த தண்ணீர் கணிசமான பகுதி காலியாகி விடும். கடலின் கீழ்ப்பரப்பில் உள்ள பவளப் பாறைகள் கூட கண்ணுக்கு தெரியும். அந்த அளவுக்கு, தரைப்பகுதி தெரியும்.

சுனாமி அலைகள் மிகவும் பிரமாண்ட உயரத்தில் வருவதால்தான், அழிவு ஏற்படுவதாக தவறான கருத்து கூறப்படுகிறது. கடலில் உள்ள பெரும்பகுதி தண்ணீர், வெள்ளமென புறப்பட்டு வருவதன் காரணமாகவே அழிவு ஏற்படுகிறது. கடலில் இருந்து வேகமாக வரும் வெள்ளம், அதன் பாதையில் உள்ள அனைத்து பொருட்களையும் துவம்சம் செய்து விடும். இதன்பின், அந்த நீர் வேகமாக கடலுக்கு திரும்பும். சுனாமி அலைகள் கடலைநோக்கி வரும்போது, ஒருசிலர், அதை சமாளித்து தப்பி விட முடியும். ஆனால், சுனாமி அலைகள், கடலை நோக்கி வேகமாக திரும்பும் போது கடலுக்குள் எல்லாமே அடித்துச் செல்லப்படும்.





என்னதான் இதயம் சுக்குநூறா உடைஞ்சாலும் அதை வச்சு சுக்கு காபி போட்டுக்குடிக்க முடியாது!

## சுனாமி எப்படி உருவாகிறது?

இது பூகம்பத்தால் ஏற்படுகிறது. அதாவது பூகம்பம் என்பது நிலப்பகுதியில், கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப்பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழ்பகுதி பாதிக்கப்படுகிறது. மலையில் வந்தால் மலையில் எரிமலையாக உருவெடுக்கிறது,

பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே பிளேட் தான் இருந்தது. அதன் மீது பூமி இருந்தது. ஆனால் கண்டங்களாக பிரிய, பிரிய, அதன் தட்ப, வெப்ப, இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு பிளேட்கள் உருவாயின. இந்த பிளேட்கள் மீது தான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த பிளேட்கள் தான். இதைத் தான் டெக்டானிக் பிளேட்கள் என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

யுரேஷியன் பிளேட், ஆஸ்திரேலியன் பிளேட் இரண்டும், இந்தோனேசியாவின் வடக்கே சுமத்ரா தீவில் மோதியது. அதனால் பூகம்பம் ஏற்பட்டது. அதன் அலைகள் தான் இந்துமாக்கடலில் சுனாமியை ஏற்படுத்தியது.

தொடர்ச்சி 8ம் பக்கம் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படியெல்லாம் வரும் சுனாமி?

1. கடலாழத்தில் ஏற்படும் எந்த பாதிப்பின் போதும் வரும்.
2. கடலாழ பூகம்பத்தினால் வரும்
3. கடலை ஒட்டிய நிலப்பகுதியல் ஏற்படும் பூகம்பத்தால் வரும்.
4. மலையில் எரிமலை உண்டாகி, அதனால் வரும்.
5. வானில் கிரகங்களின் செயல்பாடுகள் மாறும் போதும் ஏற்பட வாய்ப்புண்டு (இது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை)
6. கடலில் பௌதீக மாற்றங்கள் ஏற்பட்டாலும் வரும்.

## சுனாமி எச்சரிக்கை அமைப்பு

அமெரிக்காவில் உள்ள ஹவாய் தீவில்தான் முதல் முதலாக பசுபிக் பெருங்கடல் பிராந்திய சுனாமி எச்சரிக்கை அமைப்பு நிறுவப்பட்டது. அதற்கு காரணம் கடந்த நூற்றாண்டில் சுனாமியால் தாக்கப்பட்ட முதல் இடம் ஹவாய். 1946 ஏப்ரல் 1ல் ஹவாய் தீவை தாக்கிய ராட்சத சுனாமி அலை 159 பேரின் உயிரை விழுங்கி விட்டது. கோடிக்கணக்கான சொத்துகளும் நாசமாயின.

அமெரிக்க 1946ல் அங்கு பசிபிக் கடல் சுனாமி எச்சரிக்கை அமைப்பபை நிறுவியது. அப்போது விடுவிக்கப்பட்ட எச்சரிக்கைகளில் 75 சதவீதம் தவறாக அமைந்தது. இதனால் பொது மக்கள் மூட்டை முடிச்சுகளை எடுத்துக் கொண்டு இடம் பெயர்வதும் மீண்டும் பழைய இடத்தக்கே திரும்புவதும் சலிப்பை ஏற்படுத்தின. செலவும் ஆனது. அதனால் சுனாமி அலை உருவானால் மட்டும் கடலில் இருந்து தகவல் கொடுக்க கருவி வேண்டும் என்பதை உணர்ந்து கண்டு பிடிக்கப்பட்டதுதான் சுனாமி மிதவை கருவி

## சுனாமி மிதவை கருவி செயற்படும் விதம்:

கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டவுடன், சுனாமி அலைகள் கடலில் ஏற்படுகின்றனவா என்பதை அறிய சுனாமி எச்சரிக்கைக் கருவிகளால் மட்டுமே முடியும். அவற்றில் உள்ள பிரத்யேக கருவிகள், கடலில் நீர் இயக்கத்தில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா என்பதை தொடர்ந்து கண்காணித்துக்கொண்டே இருக்கும். நிலநடுக்கம் ஏற்பட்ட உடன் கடல் அலைகள் தோன்றினால், அந்த அலைகள் உருவாக்கும் அழுத்த மாறுபாட்டை ஒலி அலைகளாக மாற்றி, அவற்றை சிக்னல்களாக வானில் உள்ள செயற்கைக் கோள்களுக்கு அனுப்பிவைக்கும். அங்கிருந்து தரையில் உள்ள மையங்கள் சிக்னலைப் பெற்றுக் கொள்ளும். அலையின் தன்மையை விஞ்ஞானிகள் அறிந்து அது பாதிப்பை ஏற்படுத்துமானால் எச்சரிக்கைத் தகவல்களை அனுப்புவார்கள்.

இத்தகவல் சுனாமி உருவான 3 நிமிடத்தில் வெவ்வேறு நாடுகளில் உள்ள அலுவலகங்களுக்கு சென்றுவிடும். ஆனால், சுனாமி அலைகள் உருவான இடத்துக்கும் கரைப் பகுதிக்கும் உள்ள தூரத்தைப் பொறுத்துத்தான் அலைகளின் தாக்குதல் வேகம் மற்றும் நேரம் அமையும்.

இதுவரை உலகில் சுனாமி அலைகளின் தாக்குதலால் ஏராளமான உயிர் மற்றும் பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. அவை:

ஆராய்ச்சியாளர்கள் கூற்றுப்படி, முதல் சுனாமி கி.மு., 365ம் ஆண்டு ஜூலை 21ம் தேதி கிழக்கு மத்திய தரைக்கடலில் தோன்றி, எகிப்தில் அலெக்சாண்டரியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

1700, ஜனவரி: அமெரிக்காவில் வடக்கு கலிபோர்னியா, ஓரிகன், வாஷிங்டன் மற்றும் கொலம்பியா
நகரங்களை பூகம்பம் தாக்கியது. இது ரிக்டர் அளவுகோளின் 9 புள்ளிகள் இருந்தது. இதனை தொடர்ந்து ஜப்பானை சுனாமி தாக்கியது.

1730, ஜூலை: சிலி நாட்டில் சிக்டர் அளவில் 8.7 புள்ளிகள் கொண்ட பூகம்பம் ஏற்பட்டது. இதில் 3 ஆயிரம் பேர் பலியானார்கள்.

1755, நவம்பர்: போர்ச்சுகல் தலைநகர் லிஸ்பனில் ரிக்டர் அளவில் 8.7 புள்ளிகள் கொண்ட பூகம்பம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சுனாமியால் 60 ஆயிரம் பேர் பலியானார்கள்.

1868, ஆகஸ்ட்: சிலியில் ரிக்டர் அளவில் 9 புள்ளிகள் கொண்ட பூகம்பம் ஏற்பட்டது. இதன் காரணமாக தோன்றிய சுனாமி அலைகள், தென் அமெரிக்காவை தாக்கின. இதில் 25 ஆயிரம் பேர் இறந்தனர்.

1906, ஜனவரி: ஈகுவெடார் மற்றும் கொலம்பியா கடற்கரையில் ரிக்டர் அளவில் 8.8 புள்ளிகள் கொண்ட பூகம்பம் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து ஏற்ப்பட்ட சுனாமியில் 500 பேர் சிக்கி பலியானார்கள்.

1946, ஏப்ரல்: யுனிமாக் தீவுகளில் ரிக்டர் அளவில் 8.1 புள்ளிகள் கொண்ட பூகம்பம் ஏற்பட்டது. இதன் காரணமாக அலாஸ்காவை சுனாமி அலைகள் தாக்க, 165 பேர் பலியானார்கள்.

1960, மே: தெற்கு சிலியில் ரிக்டர் அளவில் 9.5 புள்ளிகள் கொண்ட பூகம்பம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியில் சிக்கி 1,716 பேர் பலியானார்கள்.

**வலி** கொடுக்கு இல்லாமலே கொட்டி விடுகிறது நாக்கு!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UK STUDENT VISA
# ஏற்படப்போகும் மாற்றங்கள்




நடைமுறையில் உள்ள UK இன் Student Visa சட்டங்களில் வருகிற 06 April 2012 இலிருந்து புதிதான சில மாற்றங்களை UKBA கொண்டுவரவுள்ளது. புதிய மாணவர்கள் அதற்கமைய தமது விண்ணப்பங்களை மேற்கொண்டு தமது Visa நிராகரிக்கப்படுவதை தவிர்த்துக்கொள்ளலாம். அலை ஓசையானது ஒவ்வொரு தடவையும் இம்மாற்றங்களை தமது மாணவர்களுக்காக அறியத்தந்து சரியாக வழிகாட்டும் தனது கடமைப்பாட்டினை இம்முறையும் செய்கிறது. நடைமுறைக்கு வரவிருக்கும் மாற்றங்களை ஒவ்வொன்றாக கீழே தருகிறோம்.

UK இலுள்ள A-Rate Trusted Colleges 6 April 2012 லிருந்து CAS (Confirmation of Acceptance for Studies) வழங்கமுடியாது. இருந்த போதிலும் அவர்கள் Highly Trusted Level இற்கு விண்ணப்பித்துக் காத்திருந்தால் மட்டுமே அவர்களால் December 2012 வரை CAS வழங்க முடியும்.

## Maximum time to Tier-4 at Degree level

சில மாணவர்கள் UK இல் தமது கல்வியைத் தமது தனிப்பட்ட அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடநேரிடலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் குறிப்பிட்ட காலம் வரைக்குமே பிற்போட முடியும். பொதுவான நடைமுறை 5 வருடங்களாக இருந்தாலும் சில விதிவிலக்குகளுமுள்ளன.

## English Language Requirement

NQF Level 6 இற்கு கீழுள்ள Levels இல் பாடநெறிகளைக் கற்க விரும்பும் மாணவர்கள் B1 SELT Certificate இனைக் கொண்டிருக்கவேண்டும். NQF Level 6 அல்லது அதற்கு மேல் கற்க விரும்பும் மாணவர்கள் B2 SELT Certificate இனை கொண்டிருக்கவேண்டும். சில பல்கலைக்கழகங்கள் தமது Own Assessment மூலம் மாணவர்களை அனுமதித்தாலும் அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை Embassy க்கு உண்டு. UK இல் ஆங்கிலம் கற்க விரும்பும் மாணவர்கள் கூட B1 SELT Certificate இனை கொண்டிருக்கவேண்டும். இங்கு நான் SELT எனக் குறிப்பிடுவது IELTS, TOEFL, CITY & GUILDS.. etc போன்ற UKBA இனால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில பரீட்சைகளாகும்.

## Working Whilst on a Student Visa

Students ற்கான தற்போதைய நடைமுறையில் உள்ள வேலைசெய்வதற்கான அனுமதிக்கப்பட்ட மணித்தியாலங்களில் மாற்றம் இல்லாத போதும் பல்கலைக்கழகங்களில் கல்விபயிலும் மாணவர்கள் வாரத்தில் 20 மணித்தியாலங்கள் வேலை செய்யமுடியும் பல்கலைக்கழக விடுமுறைநாட்களில் அவர்கள் முழுநேர வேலையில் ஈடுபட முடியும்.


## Staying to Work in the UK

05 April 2012 உடன் Tier 1 (Post Study work) நடைமுறை நிறுத்தப்படுகிறது. அதே வேளை Tier-2 (General) நடைமுறை மூலமாக அவர்கள் அதற்குரிய நிபந்தனைகளை திருப்திசெய்து விண்ணப்பிக்கமுடியும்.

## Maintenance Requirement

Tier - 4 (General) Student Visa புதிய நடைமுறைக்கமைய 6 April 2012 இருந்து பின்வரும் முறையில் தமது Fund Requirement இனை திருப்தி செய்யவேண்டும்.

தொடர்ச்சி 25ம் பக்கம்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளாகம் கல்வி நிலையத்தின் கல்வி வளர்ச்சி தொடர்பாக இயக்குனரிடம் இருந்து .....

கொழும்பு மாநகரத்தின் மிக முக்கிய இடமாகிய வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள சமய, சமூக, கலை கலாச்சாரத்திற்கு முக்கிய பணியினை ஆற்றிக் கொண்டிருக்கும் தமிழ்ச் சங்கத்தின் ஒரு பகுதி கட்டடத் தொகுதியில் 1.4.2008 இல் இருந்து இயங்கி வரும் வளாகம் கல்வி நிலையம் (Valakam Institute) இன்று ஏறத்தாழ 4 வருடங்கள் கடந்து தனது கல்விச் சேவையினை வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்நிறுவனமானது நல்ல சட்டத்தரணிகள், இதர கல்விமான்கள் ஆகியோர்களை தனது இயக்குனர் குழாமாகக் கொண்டிருப்பது இதன் தனிச்சிறப்பினையே எடுத்துக் காட்டுகின்றது. அத்தோடு குறித்த சில ஆசிரியர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று பல ஆசிரிய, ஆசிரியைகளின் பூரண ஒத்துழைப்பினால் கற்பித்தல் சேவையில் உயர்ச்சி பெறுவ - தோடு மட்டுமன்றி இன்று பல மாணவர்கள் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் போன்ற இறுதிப் பரீட்சைகளில் இந்நிறுவனத்தில் கல்வி பயின்ற மாணவ மாணவிகளும் மாவட்டமட்டம், மாகாணமட்டம் போன்றவற்றில் அதிவிசேட சித்தியினைப் பெற்று முதல்தர மாணவர்களாக திகழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களின் நற்பழக்கவழக்கங்களினை சிறந்த முறையில் கண்காணிப்பதற்கும் அவர்களது குறைநிறைகளை எடுத்துக் காட்டுவதற்கும் வரவேற்பாளர்கள், எழுதுநர்கள், சிற்றூழியர்கள் அதேபோல் பெற்றோர்களும் நிர்வாக இயக்குனர்களுக்கு உறுதுணையாக அமைகின்றமை இந்நிறுவனத்தின் மிகப் பிரதானமான ஒழுக்கவியல் சிறப்பினை எமக்கு தெளிவுப்படுத்துகிறது.
இவ் வளாகம் கல்வி நிலையமானது வங்கியாளர்கள் இதர மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'வங்கியாளர் கற்கை நெறியினை' இவ்வருடம் பங்குனி மாதம் 24ம் திகதி ஆரம்பிக்கப்படவிருப்பது எல்லா வங்கியாளரையும் அதே வேளை வங்கி வேலை வாய்ப்பினை தேடிக் கொண்டிருப்போருக்கும் ஓர் மகிழ்ச்சியான தகவலாகவே இருக்கின்றது. இக்கற்கை நெறியானது (Certificate in Banking & Finance, Diploma in Banking & Finance) என்ற இருதரப்பட்ட நிலைகளை கொண்டுள்ளது. இக்கற்கை நெறியினை கற்க விரும்புவோர் தமிழ், ஆங்கில மொழி மூலங்களை தெரிவு செய்ய முடியும்.



இக்கற்கை நெறியினை வங்கியாளர் மட்டுமல்ல ஏனையோரும் கற்பதனால் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழினை பெறுவதோடு மட்டுமல்லாமல் வங்கியாளர் நியமனத்தில் இக்கற்கை நெறியை பூர்த்திசெய்வோருக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு வங்கியில் அல்லது நிதிநிறுவனங்களில் வேலையில் உள்ளோர்கள் முதல்தர முகாமையாளராக (Top Managers) வருவதற்கும் இது துணைபுரிவதோடு மட்டுமல்லாமல் மற்றும் இதர நிர்வாக உயர் பட்டப்படிப்புகளினை (MBA) மேற்கொள்ள இது அடிப்படையாகவும் அமைகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் இந்நிறுவன அமைப்பை பொறுத்தமட்டில் தூய்மையான நிறமுடைய இருமாடிகளைக் கொண்ட காற்றோட்ட வசதிகள் கூடிய மிகப் பெரிய வகுப்பறைகளினையும் முற்றிலும் தளபாட வசதிகளுடன் பெரும் எண்ணிக்கையான மாணவர்களினை ஒரே நேரத்தில் கொள்ளக்கூடிய விசாலமான தன்மை கொண்டு விளங்குவது மாணவர்களின் கல்வி கற்றலுக்கு இலகுவாக அமைகிறது. இந்நிறுவனத்தின் மிகமுக்கியமாக நூலகவசதி, படிப்பு அறைகள்,மலசலகூட வசதி, சிற்றுண்டிச்சாலை போன்றவற்றோடுவாகன தரிப்பிட வசதி, பெற்றோர்கள் தங்கி நின்று மாணவர்களைக் கூட்டி செல்வதற்கும் ஏற்ற இடவசதி கொண்ட சூழல் இங்கு காணப்படுவது மேலும் இந் நிறுவனத்தின் வசதி வாய்ப்பினையே எமக்கு உணர்த்துகிறது. மேலும் கற்கை நெறியினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு இருப்பிடவசதியினை ஏற்படுத்திகொடுப்பதில் உறுதுணைபுரிகிறது.

இவ்வளாகத்தில் தரம் 6 – 11, க.பொ.த உயர்தர, கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கான வகுப்புகளும் அத்தோடு 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகளும் வெற்றிகரமாக நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது.


இந்நிறுவனத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக பேராதனை / யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவினையும் திறம்பட நடாத்தி வருகின்றது. அதாவது கலை முதற் தேர்வு ( G.A.Q ) கலைமானி ( BA ) வகுப்புக்கள் துறைசார் விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றன.

இதுவரை இப்பட்டப்படிப்பு கற்கை நெறியில் மூன்று அணி மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேற்றப்பட்ட நிலையில் மூன்று அணி புதுமுக மாணவர்கள் கல்வியினை கற்றுக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது கொழும்பு மாநகரில் பட்டப்படிப்புகள் நடைப்பெறுகின்ற முதல்தர நிறுவனமாக இது திகழ்வது இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையும் கூட.

மேலும் இந்நிறுவனத்தில் தொழில்சார் கணக்கியல் கற்கை நெறியான யுயுவு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கற்பிக்கப்படுகின்றன. இக்கற்கை நெறியில் Foundation (level-1), Intermediate (level-2), Final என மூன்று பிரிவுகளாக நடைப்பெறுகிறது. இக்கற்கை நெறியிலும் பல மாணவர்கள் சித்தியடைந்து வெளியேறிய நிலையில் பல புதுமுக மாணவர்களும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு உன்னத கல்விச் சேவையினை வழங்கிக் கொண்டிருக்கும் வளாகம் கல்வி நிலையம் இன்று கற்றவர் மத்தியில் மட்டுமல்ல சாதாரண மக்களின் மனதிலும் கல்வியில் தனக்கென தனி இடத்தினைப் பிடித்துள்ளது. இங்கு குறிப்பிடக்கூடிய முக்கிய விடயம் என்னவெனில் மாணவர்களின் எதிர்காலத்தினை உணர்ந்து நிர்வாக இயக்குனர்கள், பெற்றோர்களின் வறுமை நிலையினை உணர்ந்து இலவசக்கட்டணம் மற்றும் இதர கட்டணச் சலுகைகள் வழங்கப்படுவது பெற்றோர்கள் மனதில் இவ்வளாகம் கல்வி நிலையம் வேர் ஊன்றிவிட்டது என்றே கூறமுடியும். இக்கல்விப் பணியினை தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என்பதே பெற்றோர்களின் எதிர்பார்ப்பாகும். இதனை திறம்பட செய்ய வேண்டும் என்பதே நிர்வாக இயக்குனர்களினதும் அவாவாக இருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வளாகம்! உங்கள் எதிர்காலம் !!



**aat** Tamil & English Medium

July / 2012 Exam இனை நோக்கிய Quick Revision and Paper Classes

## Banking Courses

Certificate in Banking in Finance (CBF)
Diploma in Banking in Finance (DBF)

**Benefits of CBF & DBF Qualifications**

- வங்கியாளர் நியமனத்தில் முன்னுரிமை
- உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- Top Managers ஆக வருவதற்கு துணைபுரியும்
- உயர் பட்டப்படிப்பினை (MBA) மேற்கொள்ள இது அடிப்படை தகைமை

கற்கை நெறிகள் துறைசார் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்கள் தமிழ் - ஆங்கில மொழிகள் மூலம் விரிவுரைகள் நடைபெறுகின்றன

### G.C.E. (O/L), GR 6-10 English Medium

| | |
|---|---|
| Science | S.Niresh |
| Maths | T.Kapilan |
| Commerce | U.Varatharajan |
| ICT | V.Gowsigan |
| History | S.Ramachandran |

### G.C.E. (O/L), GR 6-10 Tamil Medium

| | |
|---|---|
| Science | B.Ganga / S.Niresh |
| Maths | T.Kapilan / V.Thavarajah |
| Commerce | U.Varatharajan |
| History | V.K.Ruban / K.Vanathi |
| Tamil | A.Arthigan / N.Shanthini |
| ICT | V.Gowsigan |
| English & Lit | R.Ken / S.Balasundaram |

### A/L 2014, கணித,விஞ்ஞான பிரிவு Tamil & English Medium

| | |
|---|---|
| Physics | S.Sri Kanagasabai / S.Pakirathan |
| Chemistry | E.Ranjjan |
| Com.Maths | W.Vinoth |
| Biology | Mrs.D.S.Arasaratnam |

## G.A.Q & B.A

பேராதனை & யாழ் பல்கலைக்கழக பட்டப்படிப்புகள்

**April, December பரீட்சையினை நோக்கிய வகுப்புகள் நடைபெறுகின்றன**

### A/L 2014, கலை,வர்த்தக பிரிவு

| | |
|---|---|
| Economics | V.K.Ruban |
| Accouting | S.Sayanthan |
| Bus.Studies | S.Ramanan |
| Bus.Statistics | R.Robin |
| Logic | V.Murugathas |
| Tamil | A.Arthigan |
| Hindu Culture | V.Murugathas |
| Political Science | Mrs.S.Valarmathy |
| Geography | N.Rajamanoharan |
| History | Mrs.K.Vanathi |
| Chrisrianity | Miss.N.Shanthini |

### A/L 2014 Commerce Stream English Medium

| | |
|---|---|
| Accounting | U.Varatharajah |
| Economics | M.Logasingham |
| Bus.Studies | P.Ratna |

**A/L 2012 Revision and Paper Classes**

## புலமைப்பரிசில் பரீட்சை

வகுப்புகள் – தரம் 4 & 5

பிரபல ஆசிரியர்
கி.தவகுலரெத்தினம்
மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர்

**Batch- I Weekdays | Batch - II : Weekends**

ஒவ்வொரு POYA தினத்திலும் 9 மணி முதல் 1 மணிவரை புலமைப்பரிசில் பரீட்சை கருத்தரங்கு நடைபெறும்.

valakaminstitute@gmail.com

## VALAKAM INSTITUTE

No. 7, 57th Lane, Rudra Mawatha
(Tamil Sangam Building ),
Wellawatte. Col - 06
Tel : 011-31 50 268 / 2503659

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம்! பணம்! பணம்!



ஏழையாக இருப்பவனைவிடப் பணக்காரனாக இருப்பவனால் நல்லவனாக, விவேகமுள்ளவனாக, புத்திசாலியாக, ஈகைக் குணம் உடையவனாக இருப்பது ஆயிரம் மடங்கு கஷ்டமானதாகும்.

ஈகைக் குணத்திலும் நான் பல நாடுகளிலும் பல மனிதர்களைப் பார்த்திருக்கிறேன், எல்லா நாடுகளிலுமே மிக ஏழையாக இருப்பவர்களே மிக அதிக ஈகைக் குணமுடையவர்களாக இருப்பதைக் கண்டேன். பை நிறைந்ததும் ஒருவனை ஒருவகை நோய் பிடித்துக்கொள்கிறது. பணத்தின் மீது அற்புதமான ஒரு பற்று. நான் உறுதியாகக் கூறுவேன், அது ஒரு சாபம்.

ஆகவே உன்னிடம் பணம் இருந்தால் நீ செய்ய வேண்டிய முதல் காரியம் அதைக் கொடுத்து விடுவதே. ஆனால், விவேகமில்லாமல் கொடுக்கக் கூடாது. பரோபகாரிகள் என்பவர்கள் கொடுப்பதைப் போல் கொடுக்கக் கூடாது. ஏனென்றால் அப்படிப் கொடுப்பவர்கள் உள்ளத்தில் தான் மிகவும் நல்லவன், ஏகைக் குணமுடையவன், முக்கியமானவன் என்கிற உணர்வு நிரம்பிவிடுகிறது. நீ சார்வீக முறையில் செயல்பட வேண்டும். அதாவது, பணத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்.



ஆகவே, ஒவ்வொருவனும், தன்னுடைய மிக உயர்ந்த உணர்வு நிலையிலிருந்து தன்னிடமுள்ள பணத்தை மிகப் பயனுள்ள வகையில் செலவிடுவது எப்படி என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். புழக்கத்தில் இருந்தால்தான் பணத்திற்கு மதிப்பு உண்டு என்பது முற்றிலும் உண்மை. பணத்தை செலவு செய்யும் போதுதான் அதனால் பயன் உண்டாகிறது. எல்லோருடைய விக்ஷயத்திலும் அப்படித்தான்.

இந்த சக்தி, யார் அதை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்துவார்களோ அவர்கள் கையில் இருக்க வேண்டும். அதாவது, நான் தொடக்கத்தில் சொன்னதுபோல், ஏதோவொரு வகையில் சொந்த ஆசையையும் எல்லாவிதப் பற்றுகளையும் அறுத்துவிட்டவர்கள் கையில் இருக்க வேண்டும். இதோடு அவர்கள் இப்பூவுலகின் தேவைகளைப் புரிந்துகொள்ளும் பரந்த அறிவு விளக்கம் உடையவர்களாகவும் இந்தத் தேவைகளையெல்லாம் இணைத்து உருவாக்குவது எப்படி என்கிற பூரண ஞானமும், இந்தச் சாதனங்களைக் கொண்டு பண சக்தியைப் பயன்படுத்தும் திறமையும் உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

இத்துடன் இந்த மக்களிடம் உயர்ந்த ஆன்மீக ஞானமும் இருந்தால் அவர்களால் இந்த சக்தியைப் பயன்படுத்தி தெய்வ ஆற்றல், சக்தி, அருள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் திறனுடையதான ஒன்றை புவி மீது படிப்படியாக உருவாக்க முடியும்.

ஓர் ஆணின் அல்லது பெண்ணின் புற அழகிற்காக அவர்களை மணப்பது என்பது ஓர் வீட்டின் புற வர்ணப் பூச்சிற்காக அந்த வீட்டை வாங்குவது போலாகும்

– சார்ள்ஸ் டிக்கன்ஸ்

## உண்மையாக காதல் என்பது ....

காதல் என்பது ஒருவரின் இளமைக்காலத்தில் வரக்கூடிய இனிமையான அனுபவம் என்கிறார்கள் சிலர். வேறு சிலரோ கல்யாணத்தின் பின்னர் கணவன் மனைவிக்கு இடையே இருக்கும் அன்புதான் உண்மையான காதல், அதுவும் கருத்தொருமித்த குடும்ப வாழ்வில் இருந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே முதுமை நிலையில் இருக்க கூடிய காதலே உண்மையான, முழுமையான காதல் என்றார்கள்.

காதலுக்கு கண் இல்லை, காதல் வரைமுறையற்றது, எவராலும் காதலை கட்டுப்படுத்த முடியாது, யாருக்கும் யார்மேலும் காதல் வரலாம் என்கிறார்கள் சிலர். அது எல்லாம் வெற்றுப்பேச்சு, அப்படி வருவது எல்லாம் வெறும் ஒருவர்மேல் ஒருவருக்கு வரும் ஈர்ப்பு மட்டுமே, அதை காதல் என்ற பெயரால் நாகரீகப்படுத்தி சொல்கிறார்கள் என்கிறார்கள் வேறு சிலர்.

கண்ணில்லாத காதல் குடும்பம், சமூகத்தில் பிரச்சனைகளை உருவாக்கும், அந்த காதல் உணர்ச்சிபூர்வமாய் இருக்கலாம், அறிவு பூர்வமாய் சிந்திக்கப்பட்டு வந்தால் அது குடும்பம், சமூகத்திற்கு நன்மை தரும் என்பது ஒரு சாராரின் வாதம். அப்படியா அறிவுபூர்வமாய் இருப்பது காதலே அல்ல, அது வெறும் கடமை மட்டுமே என்பது எதிர் தரப்பினரின் வாதம். கண்ணில்லாது ஏற்படும் காதல் என்பது வாழ்வில் பலருக்கு துன்பத்தில் முடிகிறது. அமரத்துவம் பெற்றதாய் பேசப்படும் காதல்கள் எல்லாம் துன்பத்தில் முடிந்தவையே. அப்படி இருக்கையில், வெறும் உணர்ச்சியினால் ஏற்றபட்ட அப்படிப்பட்ட காதலால், தனி மனிதனுக்கோ, அல்லது சமுதாயத்துக்கோ என்ன பலன் என்று மற்றவர்கள் சண்டைக்கு வருகிறார்கள்.

இது எல்லாம் ஒருபுறமிருக்க, காதல் என்பது புனிதமான ஒன்று, அது உணர்வு சம்பந்தப்பட்டது மட்டுமே, உடலுக்கும் காதலுக்கும் சம்பந்தமே கிடையாது என்பவர்கள் ஒருபுறமும், அப்படிப்பட்ட ஒன்று காதலே அல்ல, உடலும், உணர்வும் இணைந்து வருவதே காதல் என்பவர்கள் ஒருபுறமும் வாதிட்டுக்கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Importers Exporters, Food Producers Forwarding & Clearing Agents Cargo Services to all Countries by Air & Sea, Courier Service, Sri Lankan Airlines Cargo Agent.




# CARGO SERVICES

**G.T.V. Enterprises (PVT.) Ltd.**
**No.18/3, Dr.E.A.Cooray Mawatha, Colombo 06.**
**Tel:011 236 0926, 011 255 9849 Fax:011 263 1139**
**Email:gtvcourier@yahoo.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையன்பு எங்கே இருக்கின்றது?

-உங்கள் நிழல்



'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர் - புன்கண்ணீர் பூசல் தரும்' என்பது திருக்குறள்.

இதன் விளக்கம் அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும் என்பது வள்ளுவன் குறளுக்கு டாக்டர்.மு. வரதராசனார் தந்த விளக்கவுரை.

ஆம் எம்மிடத்தில் ஒருவர் அன்பு வைத்திருக்கின்றார் என்பதனை நாம் இலகுவான அளவுகோல் கொண்டு அளவிட்டுவிட முடியும் எப்படி என்று கேட்கின்றீர்களா? எமக்கு சிறுதுன்பம், கவலை, நெருக்குதல் ஏற்பட்டுவிட்டால் எம்மீது அன்பு கொண்டவர் பொறுத்திருக்க முடியாமல் அவரது முகத்திலிருந்து வரும் கண்ணீர் காட்டிக் கொடுத்துவிடும்.

இன்றைய அவசர உலகத்தில் இயந்திர வாழ்க்கை வேலை, படிப்பு, அலுவலகம், சமூகப்பிரச்சினை, வீட்டுப்பிரச்சினை இவ்வாறு மனிதர்கள் திக்கித்திணறி அமைதியற்ற மனம் வாழ்க்கைமுறை சலித்துப் போகின்றனர். ஏன் இந்த நிலைமை? நில்லுங்கள்.... திரும்பிப் பாருங்கள்... உங்கள் வாழ்க்கைமுறையை உங்களிற்கே புரியும் இந்த அழுத்தும் மனநிலைக்கு பிறர் காரணமல்ல நீங்கள் தான் அதற்கு காரணம். உங்கள் சந்தோஷம் உங்கள் கையில்தான்.

அமைதியான சந்தோஷமான நிம்மதியான வாழ்க்கைக்கு இதோ சில அறிவுரைகள்:

**பொய்** இதனை ஒழித்துக்கட்டுங்கள். உங்கள் வாழ்க்கையில் அதிலும் தேவையற்ற பொய் உங்கள் வேண்டப்பட்டவர்களிற்கு தேவையில்லாமல் அடிக்கடி சொல்லாதீர்கள். அது உங்களை உடனே சில பிரச்சினைகளிலிருந்து காப்பாற்றினாலும் உண்மை தெரியவரும் போது உங்களை வருத்தும். உண்மை தெரியவராவிடினும் உங்கள் மனச்சாட்சி உங்களையே துன்புறுத்தும் (மனச்சாட்சி இருப்பவருக்கு மட்டும் பொருந்தும்)


**நம்பிக்கைத் துரோகம்** உங்களை நம்பியிருக்கும் பெற்றோர், உறவினர், பிற உறவுமுறைகளிற்கு உங்கள் நம்பிக்கை வைத்து அவர்கள் இருக்கும்போது அதனையே அழித்துவிடும் வகையில் எதுவும் செய்யாதீர்கள்.

**கடினவார்த்தை** உங்களிற்கு கோபம் வருகின்றதா?? மனதிற்குள் 1...... இலிருந்து முடிந்தவரை number இனை count பண்ணுங்கள். இல்லை உங்களிற்கு பிடித்த கடவுள் நாமத்தினையோ, பிடித்தவர் பெயரையோ மனதிற்குள் சொல்லுங்கள் wait...wait...இதுவே ஒருவர் உங்கள் முன்னிலையில் உங்களைப் பேசுகின்றார் ஆயின் அவரிற்கு முன்னாலேயே அவரிற்கு தெரியும் வகையில் இதனை செய்வீர்கள் ஆயின் அவரின் கோபம் இன்னும் பல மடங்காகும். விளைவு விபரீதமாகும். அவரின் முன்னே சிரித்தபடி இருந்து மனதிற்குள் செய்யுங்கள். எந்த சிக்கலிலும் எதிர்காலத்தை நினைத்து அச்சம் கொள்ளாமல் நம்பிக்கையுடன் நிகழ்காலத்தில் செய்பவற்றை மனத்துணிவுடன் திட்டமிட்டு சந்தோஷத்துடன் செய்யுங்கள்.

மகிழ்ச்சியான வெற்றி உங்கள் கையில்.

உங்கள் குடும்பம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காகவோ நீங்கள் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதற்காகவோ, பிறரின் சுதந்திரத்தில், பிறரின் பணத்தில், பிறரின் வாழ்க்கையில், பிறருக்கு தீமை செய்யாதீர்கள். உங்கள் குடும்பத்தைப் பற்றி மட்டும் சிந்தியுங்கள். மற்றவர் என்ன செய்கின்றார் மற்றவர் விடயத்தில் தலையிடாதீர்கள். 'நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாமலிருங்கள் '. இந்த நிலையின் அடுத்த கட்டம்தான் பிறருக்கு நன்மை செய்தல். இது இலகுவில் எல்லோருக்கும் வந்துவிடாது. பரந்துபட்ட சிந்தனை தனது குடும்பத்தினைப் போல பிறரை நேசிக்கும் பண்பு உள்ளவன். இவர்களிற்கே இந்த நன்மை செய்யும் இயல்பு வரும். பிறருக்கு நன்மை செய்பவன் என்றவுடன் தமது பெயரிற்கும் தமது புகழுக்கும் தானம், தா்மம், உதவி செய்பவர்களை குறிப்பிடவில்லை. இந்த தன்மை உள்ளத்திலிருந்து வரவேண்டும். சிலர் இருக்கின்றனர் பத்திரிகைகளில் பெரிய எழுத்துக்களில் அவர் செய்யும் donation வரும் ஆனால் அவர் வீட்டின் அருகிலிருக்கும் கஷ்டப்பட்ட பிள்ளை படிப்புக்கு என்று கேட்டால் காசு கொடுக்க மாட்டார். பெயர் விளம்பிகள். இது மனதளவில் மாற்றம் வெளி வரவேண்டும்.

எல்லாவற்றிற்கும் அடிப்படை அன்புதான். உயிர்களிடத்தில் அன்புகொண்டவர் வாழ்க்கை பிரகாசிக்கும். வக்கிரபுத்தி அழிந்துவிடும். பணமிருப்பவரிடம் வரும் மக்கள்கூட்டம் பணம் வற்றியதும் அவரை விட்டு விலகிவிடும். அன்பினால் சேரும் கூட்டம் வற்றாது எக்கட்டத்திலும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இது எவ்வாறு என்று பார்ப்போம். நாளாந்த வாழ்க்கையில்... பாடசாலைப் பருவத்தில் கூட பல நண்பர்கள் பலவிதமாக சேருகின்றார்கள். அவர்கள் நட்பு நிலைப்பதில்லை. சிலர் படிக்கக்கூடிய பிள்ளைகளுடன் மட்டும் நட்புறவை வைத்திருக்க விரும்புகிறார்கள். இதுவும் வாழ்க்கை முழுக்க நிலைப்பதில்லை. உண்மையன்புடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி 20ம் பக்கம் .....

# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)

K.K.S வீதி, மதவடி முன்பாக

021 224 2022 - 071 454 6956 - 077 722 5292

யாழ் மண்ணில்
முதன் முதலாக
கிருபா லேணர்ஸ்
அறிமுகப்படுத்தும் அதி நவீன
தொழில்நுட்பத்துடன்
கூடிய உள்ளக
சாரதி பயிற்சி நெறி













இவ் இயந்திரம்
நிஜமான வாகனத்தில்
பயிலுவதைப் போன்ற உணர்வை
அளிப்பதுடன்
பல்வேறுபட்ட வீதிகள், போக்குவரத்து
நிலவரங்கள், வித்தியாசமான
காலநிலைகளில் வாகனம்
செலுத்துவதற்கான பயிற்சியினை பயிற்சி
நிலையத்திற்குள்ளே பெற்றுக்
கொள்வதால் எந்தவித பயமோ
தயக்கமோ இன்றி
தன்னம்பிக்கையுடன்
வீதிகளில் பயிற்சி பெற
முடியும்.

ATA Aspirations

# KIRUBA LEARNERS

**(Govt. Approved Driving Training School)**

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
021 222 4353
021 492 3200

A9 வீதி, சாவச்சேரி
021 492 3202
021 320 1818

நெல்லியடி
021 300 6550
021 492 3201

கிளிநொச்சி
021 228 5505

விசுவமடு
021 320 1515

மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook | Search | Anu Subramaniyam | Find friends | Home



## Vikneshwaran Abinaya

Lives in Colombo, Sri Lanka · Born on 20 April · Knows English, Tamil

✓ Friends | Message

Wall
Info
Photos (19)
Friends

Friends (69)


Vimal Rajh


Thishon Shariban


Somasundaram ...

# ஃபேஸ் புக்

## ‘பணமா? ச்சே. நம்ம அன்பை நீ கொச்சைப் படுத்தறே’

ஃபேஸ் புக்கில் அன்றைக்கு வந்த மெசேஜைப் பார்த்ததும் புல்லரித்துப்போனான் மோகன். அவனை யாரும் அழகு என்று சென்னதே இல்லை. அவன் மனைவி, முதல் தேதி அவன் சம்பளப் பணத்தைக் கொடுத்தபோது கூட அப்படிச் சொன்னதில்லை. அதுவும் நல்லவர் என்று சத்தியமாக யாரும் சொன்னதே இல்லை. 45 வயதில் இப்படி ஒரு சந்தோஷத்தை அவன் உணர்ந்து இதுதான் முதல் முறை.

யார் அந்த அம்பிகா என்று பார்க்கும் ஆவலுடன் அவளது ஃபேஸ் புக்கில் நுழைந்தான். அவளது புகைப்படங்கள் 20 – க்கு மேல் இருந்தன. பார்க்கப் பார்க்க மோகனுக்குப் பரவசம் உண்டாயிற்று. செமை அழகு. நல்ல கலர். பெரிய கண்கள் என்று அவனுக்கு உடனே பற்றிக்கொண்டது. 30 வயது. குடும்பத்தலைவி, கணவர், பிஸினஸ்.

உடனே அவளைத் தோழியாக்கிக் கொண்டான். அடுத்த வினாடியே நன்றி மோஹி. 🙂 என்று பதில் வந்தது.

அவனும் பதிலுக்கு ஸ்மைலி 😀 அனுப்ப பதிலாக இன்னொரு ஸ்மைலி 😀 ஓடிவந்தது!

பற்றிக்கொண்டது அந்த நட்பு.

தினம் 10, 15 என்று ஆரம்பித்த மெசேஜ் அடுத்த வாரம் சாட்டிங்கில் சிறகுவிரித்து எழுந்தது.

இப்போது சென்னையில் காலை 10 மணி, சிங்கப்பூரில் என்ன நேரம்?, என்று அல்பையாய் ஆரம்பித்த சாட், காதல், அன்பு, உள்ளாடை, புருஷன் ஊரில் இல்லை, மனைவி அம்மா வீட்டுக்கு போயிருக்கிறாள் என்று பல்கிப் பெருகிற்று.

தினம் ஐந்து நிமிடம், பத்து நிமிடம் என்று ஆரம்பித்த ஃபேஸ் புக் சாட், 4 மணிநேரம், ஐந்து மணிநேரம் என்று சாப்பிட்டது.

காலையில் அலுவலகம் வந்தால் முதல் வேலையாக ஃபேஸ் புக்தான். கடலை, கடலை, கடல் அளவு கடலை!

மற்ற ஃபேஸ் புக் நண்பர்களுடன் மோகன் தொடர்பைத் துண்டித்தான். எங்கே அதற்கு நேரம்? எப்போதும் அம்பிகாதான்.

மறந்து போய் ஒரு முறை மனைவியைக் கூட அம்பிகா என்று கூப்பிட்டு மொத்து வாங்கினான்.

விடுமுறை நாளிலும் இதே வேலை, பிஸினஸ்மேன், வெளியில் கிளம்பினால் போதும் அம்பிகா, இங்கே ஆஜர்.

ஒரு நாள் மோகன் ஏதோ வேலையாக பிஸியாக இருந்துவிட்டால் போதும், மறுநாள் அம்பிகா செல்லமாக, உரிமையாக சண்டை போடுவாள். அவன் ஸ்டேட்டஸ் மெசேஜுக்கு யாராவது பெண்கள் கமென்ட் போட்டிருந்தால் கடுப்பாகிவிடுவாள். புலம்புவாள்.

நெகிழ்ந்து போய்விடுவான் மோகன்.

மோஹி, எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணுவியா?

அதுக்காகத்தான் காத்திருக்கிறேன். என்ன பண்ணணும் சொல்லு?

பொங்கல் அன்னிக்கு காஞ்சிபுரம் பட்டுப் புடவை கட்டிக்கணும்னு ஆசைப் படறேன். வாங்கி அனுப்ப முடியுமா?

தாராளமாக. என் மனைவியும் அதான் கேட்டா. உனக்கு என்ன கலர் வேணும் அம்பி?

உங்க வைஃப் என்ன கலர் கேட்டா?

பச்சை. உனக்கு?

எனக்கு அரக்கு கலர்தான் பிடிக்கும்

எனக்கும் அந்தக் கலர் பிடிக்கும். நாளைக்கே காஞ்சிபுரம் போய் வாங்கி அனுப்பறேன்.

மோஹி, எத்தனை ரூபாய் என்னு சொல்லு, நான் அனுப்புறேன். உன் அக்கவுன்ட் நம்பரைச் சொல்.

பணமா? ச்சே. நம்ம அன்பை நீ கொச்சைப் படுத்தறே

நான் அனுப்பற புடைவையை பொங்கல் அன்னிக்குக் கட்டிக்கிட்டு நீ ஒரு ஃபோட்டோ எடுத்து ஃபேஸ் புக்ல போடு அது போதும்.

புடவை கட்டிக்கிட்டுதானே?

ha ha

ஹஹா. நான் மே லீவ்ல ஊருக்கு வரேன். அப்ப உங்களுக்கு சிங்கப்பூர்லேர்ந்து என்ன வாங்கிட்டு வரணும்?

உன் அன்பு ஒன்றே போதுமடி lol

டேய்

?

!

ம்

உம்மா

> செமை அழகு
> நல்ல கலர்
> பெரிய
> கண்கள்

மாதக்கடைசி என்பதால் மோகன் ஒருவரிடம் வட்டிக்குக் கடன் வாங்கிக் கொண்டு, ஒருநாள் லீவ் போட்டுவிட்டு காஞ்சிபுரம் கிளம்பினான். புடவை விலை அவனை பயமுறுத்தியது. 9000 ரூபாக்கு இதில் என்ன இருக்கிறது? கல்யாணமான 12 வருடத்தில் மனைவிக்கு இதுவரை பட்டுப்புடவை எடுத்துக் கொடுத்ததே இல்லை. அரக்கு கலர் என்ன என்பதை அன்றுதான் அவனுக்குத் தெரிந்தது. தெரிந்தவர்கள் யாரும் வரக்கூடாதே என்று பயந்து பயந்து பர்ச்சேஸ். பட்டுப் புடவையின் விலை எவ்வளவோ அதில் பாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூருக்கு குரியர் அனுப்பவும் செலவு ஆனது.

தினந்தோறும் சாட்டிங்.

புடவை வந்ததாடி?

இன்னும் வரவில்லைடி

என்னது டி யா?

டியான்னு சென்னேன்!

வந்ததும் கட்டிக்கொண்டு ஒரு ஃபோட்டோ எடுத்து அனுப்பு.

புடவை சரி, மேட்சாக ஜாக்கெட் அனுப்பியிருக்கிறீர்களா?

ஐயயோ, இல்லியே?

அப்படியானால் புடைவையைக் கட்டிக்கொண்டு, ஜாக்கட் இல்லாமல் போட்டோ எடுப்பேன். பரவாயில்லையா?

ஹை, ஜாலி

உதை

ஹாஹா

ச்சீ

பொங்கல் தினம் நெருங்கியது. வீட்டில் பசங்களுக்கும் தனக்கும் டிரெஸ் எடுக்க வேண்டுமே என்று மனைவி அவசரப்படுத்தினாள்.

மனைவிக்கு 300 ரூபாய்க்கு ஒரு நைலக்ஸ் சேலை எடுத்துக் கொடுத்தான். ஒண்ணு வாங்கினால் ஒண்ணு ஃப்ரீயில் குழந்தைகளுக்கு வாங்கினான்.

சாட் சாட் சாட்

பொங்கல் நாள் வந்தது.
மோகன் பல்கூடக் தேய்க்கவில்லை. படாரென எழுந்து அரக்குப் புடவையில் அவள் எப்படி இருப்பாள்?
லேப் டாப்பை ஆன் பண்ணி, ஃபேஸ் புக்கில் மூக்கை நீட்டினான்.

தனக்கு வந்திருந்த பொங்கல் வாழ்த்துக்களைக் கூடப் பார்க்காமல், அம்பிகாவின் வதனப் புத்தகத்தில் அதாவது முக நூலில்... இப்படியெல்லாம் செல்லக்கூடாது ஃபேஸ்புக் என்றுதான் அழைக்கவேண்டும் என ப்ரியமான சிலர் ஆவேசப்படுவதால், அம்பிகாவை க்ளிக் செய்து, அவளது photo ல் நுழைந்தான்.

நுழைந்தவன் அதிர்ந்தான்.

தொடரும் ...



# ஓசையின் தத்துவங்கள்

- ஹோட்டல்ல காசு இல்லன்னா மாவு ஆட்ட சொல்லுவாங்க ஆனா பஸ்சுல காசு இல்லன்னா பஸ்ஸை ஆட்ட சொல்லுவாங்களா?
- கோழி போட்ட முட்டையிலிருந்து இன்னொரு கோழி வரும். வாத்தியார் போட்ட முட்டையிலிருந்து இன்னொரு வாத்தியார் வருவாரா?
- என்னதான் ஒருத்தர் படிக்காத மேதையா இருந்தாலும் அவர் டாஸ்மாக்ல போய் தண்ணியடிச்சா அவரை 'படிக்காத போதை' ன்னு சொல்லமுடியுமா?
- சுடச்சுட இருக்கிறது. ஆனாலும் பசியாற முடியவில்லை காலை நேர நியூஸ்பேப்பர்.

## சிரி...சிரி

அப்பாங்கற மரியாதை இல்லாம என் முன்னாடியே 'தண்ணி' அடிக்கிறியா?

நான் உனக்குப் பின்னாலதான் நின்னு குடிச்சிட்டிருந்தேன். நீதான் படார்னு திரும்பிட்டே!

பஸ்ஸில் சீட் இருந்தும் நின்னுக்கிட்டே வந்தேன்.

சீட் இருந்தும் ஏன் நின்னுக்கிட்டே வந்தீங்க?

சீட்டில் எல்லோரும் உட்கார்ந்திருந்தாங்க.

'நேத்து பஸ்சுக்காக 3மணி நேரம் காத்துக்கிட்டு நின்னேன்.'
அப்புறம்?
கால் வலிச்சதால உட்கார்ந்திட்டேன்.

என்னதான் நீங்க செண்டிமென்ட் பார்த்தாலும் கப்பல் கிளம்பிறதுக்கு முன்னாடி எலுமிச்சம்பழம் எல்லாம் வைக்க முடியாது...

சங்கு ஊதிவிட்டுத் தான் கிளம்பணும்

சிறுகதை

# 25 வயது குழந்தை

இரயிலில் அமர்ந்திருந்த இளைஞன் அப்பாவிடம் 'மரங்களும் கட்டிடங்களும் வேகமாகப் பின்பக்கம் ஓடுதுப்பா' என்றதும் அனைவருக்கும் வியப்பு.

25வயது இளைஞனிடமிருந்து இப்படிப்பட்ட வார்ணனையா என அதியசித்தனர்.

திடீரென்று மழை தொடங்கவும் 'அப்பா மழை' என்று கூவியவன் குழந்தை மாதிரி கைதட்டினான்.

ஒரு பயணி சொன்னார்.'ஏன் சார் பையனுக்கு மனநிலை சரியில்லேன்னா ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போறதுதானே?'

பெரியவருக்கு முகம் சுருங்கிற்று.

'பையனுக்குப் பிறவியிலேயே கண்பார்வை கிடையாது.ஆபரேஷன்லே போனவாரம்தான் பார்வை கிடைச்சுது.இந்த மழையையும் இயற்கைக் காட்சிகளையும் இப்பத்தான் அவன் வாழ்க்கையிலேயே முதல்தடவையாப் பார்க்கிறான் சிரமத்துக்கு மன்னிச்சுக்குங்க' என்றார் தயக்கத்துடன்.

# சிந்திக்க....

வெற்றி என்பது நீ பெற்றுக் கொள்வது... தோல்வி என்பது நீ கற்றுக் கொள்வது. ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக சிலவற்றை கற்றுக் கொள்வது தவறில்லை. தோல்விகளை ஏற்றுக் கொள்ளுங்கள்...


பெற்றோர்களுக்காக ஏதாவதொன்றை விட்டுச் செல்லுங்கள். பெற்றோர்களை ஏதாவதொன்றிற்கக விட்டுச் செல்லாதீர்கள்...

கடவுள் மேல் உள்ள நம்பிக்கையில் யாரும் தமக்க மொட்டை போடுவதில்லை... மாறாக மறுபடியும் தங்களுக்கு முடி வளரும் என்ற நம்பிக்கையில் தான் மொட்டை போடுகிறார்கள்...

அன்பு என்பது வார்த்தைகளில் இருக்கக் கூடாது, மாறாக இதயத்தில் இருகக வேண்டும். கோபம் என்பது இதயத்தில் இருக்கக் கூடாது, வார்த்தைகளில் மட்டும் தான் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகளின் ஓசை



நீங்கள் 12 வயதிற்கு உட்பட்டவரா?

பின்வரும் இலக்கங்களை
100 இற்கு மட்டம் தட்டுக.

a) 876
b) 3491
C) 4500
d) 65500
e) 46500

மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கான
சரியான விடையினை எழுதி எமக்கு அனுப்பி
**"KAKI"** இன் அழகிய காலணி ஒன்றை
பரிசாக வெல்லுங்கள்



நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**ATA Aspirations (Pvt.) Ltd.**
No: 122/B, Galle Road,
Dehiwala South, Colombo.
Tel: 011 272 2990, 011 720 7989
Mob: 077 6874576, 077 6408643


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
www.ataaspirations.com

நாளைய உலகின் நாயகர்களான இன்றைய மழலை மொட்டுக்களுக்கான ஒரு பகுதியை ஒதுக்கி அவர்களின் ஆக்கங்களுக்கும், திறமைகளுக்கும் வழியமைக்கும் ஒரு ஊடகமாக அலை ஓசை வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். பெற்றோர்களே உங்கள் செல்வங்களை 'மழலைகளின் ஓசையில்' அங்கத்துவர்களாக இணைத்து அவர்களின் பக்கத்தை அவர்களின் ஆக்கங்களால் அலங்கரிக்க உங்களை அழைக்கிறோம். கீழுள்ள பகுதியை நிரப்பி புகைப்படத்துடன் எமக்கு அனுப்பி உங்கள் செல்வங்களை இலவசமாக அங்கத்துவர்கள் ஆக்குங்கள்.

| | |
|---|---|
| பெயர் | : ............................................................ |
| வயது | : ............................................................ |
| முகவரி | : ............................................................ |
| | ............................................................ |
| தொலைபேசி இல. | : ............................................................ |
| பாடசாலை | : ............................................................ |

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**ATA Aspirations (Pvt.) Ltd.**

No: 122/B, Galle Road,
Dehiwala South, Colombo.

Tel: 011 272 2990, 011 720 7989
Mob: 077 6874576, 077 6408643







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையும் நட்புறவு பாடசாலைக்காலம் முடிந்த பின்னரும் வாழ்க்கைக்காலம் முழுவதும் தொடரும். காதலர் வாழ்விலும் அப்படித்தான் உண்மையான அன்புடன் சேரும் காதலர் கல்யாணம் வரை சென்றதுடன் மட்டுமன்றி அதன்பின்னர் அவர்களது வாழ்க்கை முடியும்வரை அன்பு குறையற்று வாழ்வர். ஆனால் இன்றைய காதலர்தான் வெளி அழகினையும் பணத்ததினையும் படிப்பினையும் வைத்து வரும் காதல் ஆயிற்றே. வெளி அழகை வைத்து வரும் காதல் புஸ்வாணம் தான். அதனை விட அழகாக வேறு ஒருவர் வந்தால் அந்தக் காதல்............

இந்தக் காதலர்தான் இப்படியாயின் இவர்களை சேர்த்து வைக்கும் பெற்றோர் உண்மையிலே பிள்ளைகளது நல்வாழ்க்கை அவர்களது எதிர்காலம் என்று நினைப்பவர்கள் தங்கள் கௌரவம் தமது ஆசைகள் எல்லாம் கைவிட்டு பிள்ளைகளின் மனம் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பதற்காக தம்மை தியாகம் செய்கின்றார்கள். சில பெற்றோரோ இவர்கள் இப்படிச் செய்து விட்டார்களே என்று காலம் பூராவும் அவர்களை மன்னிக்காது தாமும் துன்பப்பட்டு பிள்ளைகளையும் துன்புறுத்துகிறார்கள்.

அன்பிருந்தால் இந்தக் கோபம் பறந்தோடிவிடும். பிறரிடத்து அன்பு வைத்துப்பார் நீ அன்பு வைத்தவர் மீது உனக்கு கோபமே வராது. நீ அன்பு வைத்தவரை வெறுக்கவே மனம் வராது. அன்பு வைத்தவரை துன்புறுத்த மனம் வராது. அன்பு வைத்தவர்களுக்கு ஓர் சிறு துன்பம் என்றாலே உன்னால் தாங்க முடியாமல் போய்விடும். அன்பு என்பது சொல்லி விளக்கக்கூடிய விடயமல்ல. அனுபவத்தால் மட்டும் உணரக்கூடிய உணர்வு. அன்பு வைப்பவரும் அன்பு கொண்டவரும் உணர்வுகளால் உணரும் உணர்வு. இது எவ் வகைப்பட்ட உறவுமுறைக்கும் பொருந்தும்.

Eg:
தாய் – பிள்ளை, நண்பன் – நண்பி, மாமி – மருமகள், கணவன் – மனைவி, பேரன் – பேரப்பிள்ளைகள், காதலன் – காதல், அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கிடையிலான உறவு. சமூகத்தில் காணப்படும் எவ்வகைப்பட்ட உறவுமுறைக்கும் பொருந்தும்.

எவ்வகைப்பட்ட உறவுமுறை எவ்வகைப்பட்ட மனிதனாக இருந்தாலும் அம்மனிதர் அன்புடையவராக இருந்தால் பிரச்சினைகள் குறையும். இவ்வாறு தனிப்பட்ட மனிதன் ஒருவனிடம் உருவாகும் அன்பு அவனது குடும்பத்தில் அமைதியையும் சந்தோஷத்தையும் உருவாக்கும். இவ்வாறு எல்லோரும் அன்புடையவர்களாக இருந்தால் ஒட்டுமொத்த சமூகத்திலும் பிரச்சினைகள் குறையும். அமைதி உருவாகும்.

அன்பு இல்லாத ஒருவனே வன்முறையை நாடுகின்றான். வன்செயலில் ஈடுபடுகின்றான். பிறரைத் துன்புறுத்தும் வக்கிரபுத்தி வருகின்றது. அன்பு கொண்ட மென்மையானவர்கள் பிற உயிர்களை வருத்தும் துர்குணம் வராது. இது ஒவ்வொருவர் மனதிலும் துளிர்விட உலகமே சமாதான உலகாக மாறிவிடும். அமைதிக்காற்று உலகெங்கும் வீசும். சாந்தி சமாதானம் அமைதி புது உலகை காணுவோம்.

'அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று' குறள்

## ஜோக்ஸ்


மழைக்கும் வெய்யிலுக்கும் என்ன வித்தியாசம்?
மழையில் ஸ்ரேயா டான்ஸ் ஆடுவா வெய்யிலில் பாவனா டான்ஸ் ஆடுவா

ஒரு தடவை கணவன் மனைவியிடம் கேட்டான்
நான் செத்தா நீ என்ன பண்ணுவா?

மனைவி:
உங்ககூட நானும் செத்துருவன்

கணவன்:
ஜோசியக்காரன் அப்பவே சென்னான் செத்தாலும் சனி உன்னை விடாது என்னு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலங்கையின் தலைநகரில் மூக்குக்கண்ணாடி துறையில் தனக்கென ஒரு சிறந்த நாமத்தையும் அதிகளவு வாடிக்கையாளர்களையும் கொண்டமைந்த கா்வாலோ ஒப்ரிக்கல்ஸ் தனது புதிய கிளை நிறுவனத்தினை யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் கடந்த மார்ச் மாதம் 2012 ல் திறந்து வைத்துள்ளனர்.**









கணனி மயப்படுத்தப்பட்ட நவீன கண் பரிசோதனை முறையில் மிகவும் சிறப்பான முறையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் கணனிப் பாவனையாளர்களுக்கு விசேட லென்சுகள் பொருத்தப்பட்ட கண்ணாடிகள் மற்றும் மாணவர்களுக்கான கண்ணாடிகளை விசேட விலைக் கழிவுகளில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் மிகவும் குறைந்த விலையான 900 ரூபாவில் இருந்து வழங்குவதுடன் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை தினமும் இரவு 8 மணி வரையும் இச்சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்நிறுவனத்தில் பின்வரும் விசேட சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. ஊழியர்களுக்கான மருத்துவச் செலவு மீளப் பெறும் வசதி
2. வயோதிபர்களுக்கான சேவையினை வீட்டுக்கு வந்து செய்து தரப்படும்.
3. 24 மணித்தியாலங்களுக்குள் இலவச விநியோகம் செய்து தரப்படும்.
4. சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் கண்ணாடிகளை பெற்றுக்கொள்ள முடியும்.
5. விளையாட்டு வீரர்கள்இ வாகன ஓட்டுனர்கள் போன்றவர்களுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கண்ணாடிகளை சிறந்த விலைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.



கடந்த மார்ச் மாதம் 04ம் திகதியில் கல்வியங்காடு சிறப்புச் சந்தைத் தொகுதியில் கா்வாலோ ஒப்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் புதிய கிளை திறந்து வைக்கப்படுவதையும் அந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கணித நுட்பங்கள்

கணிதத்திலுள்ள சில இலகுவான கணித்தல் முறைகளை அலை ஓசை ஊடாக எமது மாணவச்செல்வங்களுக்குத் தருவதில் அலை ஓசையானது பெரு மகிழ்ச்சியடைகிறது.இவ் நுட்பங்களானது எல்லா இலக்கங்களுக்கும் பொருத்தமற்றதாக இருப்பினும் பெரும்பாலான இலக்கங்களுக்குப் பயன்படுத்தக் கூடியதாகவுள்ளது. உதாரணங்கள் முலம் இவ் நுட்பங்களை விளங்கிக்கொள்வது இலகுவானதென்பதால் அம்முறையையே இங்கும் பயன்படுத்தியுள்ளேன்

நுட்பம் 1

108 X 109 இன் பெறுமதியைக் காண பின்வரும் முறையைப் பயன்படுத்தலாம்.
108 இலுள்ள 100 இற்கு மேலதிகமாக உள்ள 8 இனை மற்றைய இலக்கமான 109 உடன் கூட்டிக் கொள்ளுங்கள்.( 8 + 109 = 117)
மற்றைய பக்கம் இரு இலக்கங்களிலும் மேலதி - கமாக உள்ள 8 இனையும் 9 இனையும் பெருக்கி வைத்துக்கொள்ளுங்கள். (8 X 9 = 72)
இறுதி விடையானது 117 இனையும் 72 இனையும் இணைத்து எழுத வரும் 11772 ஆக இருக்கும்

மேலதிக உதாரணங்கள்

108 X 108 = (108 + 8)|( 8 X 8)
= 116|64
= 11664

103 X 105 = (3 + 105)|(3 X 5)
= 108|15
= 10815

நுட்பம் 2

96 X 96 இன் பெறுமதியைக் காண பின்வரும் முறையைப் பயன்படுத்தலாம்.
96 இலுள்ள 100 இற்கு குறைவாகவுள்ள உள்ள 4 இனை 96 இலிருந்து கழித்துக் கொள்ளுங்கள் . ( 96 - 4 = 92)
மற்றைய பக்கம் இரு இலக்கங்களிலும் 100 இற்குக் குறைவாகவுள்ள இரு 4 இனையும் பெருக்கி வைத்துக்கொள்ளுங்கள். (4 X 4 = 16)
இறுதி விடையானது 92 இனையும் 16 இனையும் இணைத்து எழுத வரும் 9216 ஆக இருக்கும்

மேலதிக உதாரணங்கள்

93 X 93 = (93 - 7)|( 7 X 7)
= 86|49
= 8649

97 X 97 = (97 - 3)|(3 X 3)
= 94|09(இங்கே 9 ஆனது 09 ஆக இடப்பட வேண்டும்.)
= 9409

$998^2$ = (998 - 2 )|(2x2)
(இங்கே 998 இனை 1000 இலிருந்து கழிக்கவேண்டும்)
= 996 | _ _ 4
= 996 | 004.
= 996004

$9998^2$ = (9998 - 2) | (2x2) (இங்கே 9998 இனை 10000 இலிருந்து கழிக்கவேண்டும்)
= 9996 | _ _ _ 4
= 9996 | 0004
= 99960004

நுட்பம் 3

5 இல் முடியும் ஒரு இலக்கங்களின் வர்க்கத்தினைக் காண்பதற்கு பின்வரும் முறையைப்பயன்படுத்த முடியும்.
25 இன் வர்க்கத்தினைக் காண்பதற்கு முதலில் 25 இலுள்ள 2 இனையும் அதற்கு அடுத்த இலக்கமான 3 இனையும் பெருக்க வரும் 6 இனை 5 இன் வர்க்கமான 25 உடன் இணைக்க வரும் 625 இறுதி விடையாகும்.
அதாவது 252 = (2 X 3) | 25
= 6 | 25
= 625

மேலதிக உதாரணங்கள்

$15^2$ = (1 x 2 )| 5 x 5
= 2 | 25
= 225

$35^2$ = (3 x 4 )| 5 x 5
= 12 | 25
= 1225

$45^2$ = (4 x 5) | 5 x 5
= 20 | 25
= 2025

$95^2$ = (9 x 10) | 5 x 5
= 90 | 25
= 9025

நுட்பம் 4

பொதுவான இரு இலக்கங்களைப் பெருக்குவதற்கு பின்வரும் முறையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

26 இனை 31 இனால் பெருக்க வரும் விடையைக்காண்பதற்கு சாதாரணமாக நாம் பின்பற்றும் கீழ் வரும் முறையில் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

```
 2 6
   x
 3 1
------
------
```

2 இனை 1 இனால் குறுக்காக பெருக்க வரும் விடையையும் 6 இனை 3 பெருக்க வரும் விடையையும் கூட்டிக்கொள்ளுங்கள்.பின்னர் 2 இனை 3 இனால் பெருக்க வரும் விடையினை முன்னைய விடைக்கு முன்னாலும் 6 இனை 1 இனால் பெருக்க வரும் விடையினை பின்னாலும் இட்டு பின்வருமாறு மனதில் கொள்ளுங்கள்.

அதாவது
[(2 X 3) | (2 X 1)+(6 X 3)|(6 X 1)]
உங்களது இலக்க ஒழுங்கு பின்வருமாறு அமையும்
[6 | (2 + 18) | 6]
[6|20|6]
இங்கு இருபதிலுள்ள 2 இனை முன்னாலுள்ள 6 உடன் கூட்ட வரும் [(6 + 2) | 0 | 6] = 806 என்பதே விடையாகும்.

மேலதிக உதாரணங்கள்

43 X 52 = [ (4 X 5)|(4 X 2) + (3 X 5)|(3 X 2)]
= [20 |(8 + 15) |6 ]
= [20 | 23 |6 ]
= [(20 + 2) |3 |6 ]
= 2236

23 X 19 = [ (2 X 1) | (2 X 9)+(3 X 1) |(3 X 9)ஸ
= [2 | ( 18 + 3) |27 ]
= [2 | 21 |27]
= [(2 + 2) |(1 + 2)| 7 ]
= [4 | 3 | 7]
= 437


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம் 5

11 இன் பெருக்கங்களை இலகுவாக எப்படிக் கணிக்கமுடியும் எனப்பார்ப்போம்.
25 இனைப் 11 இனால் பெருக்குவதற்கு 25 இலுள்ள 2 இற்கும் 5 இற்குமிடையே அதே 2 இனையும் 5 இனையும் கூட்ட வரும் இலக்கமான 7 இனை இட வரும் 275 இறுதி விடையாக இருக்கும்.
அதாவது

25 X 11 = 2 | (2 + 5) | 5
= 2 | 7 |5
= 275

மேலதிக உதாரணங்கள்
45 X 11 = 4 |(4 + 5) | 5
= 4 | 9 |5
= 495
39 X 11 = 3 |(3 + 9)|9
= 3 |12|9
= (3 + 1)|2 |9
(இங்கு 12 இலுள்ள 1 ஆனது 3 உடன் கூட்டப்படவேண்டும்)
= 4|2|9
= 429

இப்பகுதியின் உங்கள் மேலதிக சந்தேகங்களுக்கு அலை ஓசை விடை தரத் தயாராக இருப்பதுடன் இப்பகுதிக்கான உங்கள் நுட்பங்களும் வரவேற்கப்படுகின்றன.

தொடரும்....

# UK STUDENT VISA ....

தொடர்ச்சி


| | Before April 2012 | After April 2012 |
|---|---|---|
| Tier 4 (General Students) | Inner London £ 800 / month Outer London £ 600 / month (for 9 months) | Inner London £ 1000 / month Outer London £ 800 / month (for 9 months) |
| Dependants of Tier 4 (General Students) | Inner London £ 533 / month Outer London £ 400 / month | Inner London £ 650 / month Outer London £ 450 / month |
| Tier 4 (Child) (Private) | £ 500 /month | £ 550 /month |
| Tier 4 (Child) under 12 years old | £ 800 / month | £ 1500 / month |
| Tier 4 (Child) aged 16 and 17 (inner london) | £ 1333 / month | £ 900 / month |
| Tier 4 (Child) aged 16 and 17 (outer london) | £ 600 / month | £ 700 / month |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னியின் செல்வன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளந்து பார்த்ததில் இருவரும் சமமான உயரமே இருந்தார்கள். அதோடு விடாமல் சிவனையும் திருமாலையும் நேரிலேயே கேட்டு விட்டேன். அவர்கள் என்ன சொன்னார்கள், தெரியுமா? அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவர் வாயிலே மண்ணு என்று சொன்னார்கள். அவ்விதம் செல்லி, தங்களைப் பற்றிச் சண்டை போடுகிறவர்களின் வாயிலே போடுவதற்கு இந்தப் பிடி மண்ணையும் கொடுத்தார்கள்! என்று கூறிய வல்லவரையன், மூடியிருந்த தனது வலக்கையைத் திறந்து காட்டினான். அதற்குள்ளே ஒரு பிடி மண் இருந்தது அதை வீசி உதறினான்.

கூட்டத்திலிருந்தவர்களில் பலர் அப்போது பெரும் உற்சாகங்கொண்டு தலைக்குத் தலை தரையிலிருந்து ஒரு பிடி மண் எடுத்து, நம்பியின் தலையிலும் பட்டர் தலையிலும் வீசி எறிய ஆரம்பித்தார்கள். இந்தத் தூராக்ரகச் செயலைச் சிலர் தடுக்க முயன்றார்கள்.

அடே! தூர்த்தர்களா? நாஸ்திகர்களா? என்று சொல்லிக் கொண்டு ஆழ்பார்க்கடியான் தன் கைத் தடியைச் சுழற்றிக் கொண்டு கூட்டத்திற்குள் பிரவேசித்தான்.

ஒரு பெரிய கலவரமும் அடிதடி சண்டையும் அப்போது அங்கே நிகழும் போலிருந்தன. நல்லவேளையாக, அந்தச் சமயத்தில் சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய சலசலப்பு ஏற்பட்டது.

சூராதி சூரர், வீரப்பிரதாபர், மாறபாண்டியன் படையை வீறுகொண்டு தாக்கி வேரோடு அறுத்த வெற்றி வேல் உடையார், இருபத்து நாலு போர்களிலும் சண்டையிட்டு அறுபத்து நான்கு விழுப்புண்களைப் பெற்ற திருமேனியர், சோழ நாட்டுத்த தனாதிகாரி, தானிய பண்டார நாயகர், இறைவிதிக்கும் தேவர், பெரிய பழுவேட்டரையர் விஜயம் செய்கிறார்! பராக்! பராக்! வழி விடுங்கள்! என்று இடிமுழக்கக் குரலில் கட்டியம் கூறுதல் கேட்டது.

இவ்வாறு கட்டியம் கூறியவர்கள் முதலில் வந்தார்கள். பிறகு முரசு அடிப்பவர்கள் வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பனைமரக் கொடி தாங்குவோர் வந்தார்கள். பின்னர், கையில் வேல் பிடித்த வீரர்கள் சிலர் கம்பீரமாக நடந்து வந்தார்கள். இவர்களுக்குப் பின்னால் வந்த வேல் பிடித்த வீரர்கள் சிலர் கம்பீரமாக நடந்து வந்தார்கள். இவர்களுக்குப் பின்னால் வந்த அலங்கரித்த யானையின் மீது ஆஜானுபாகுவான கரிய திருமேனியர் ஒருவர் வீற்றிருந்தார்.
மத்தகஜத்தின் மேல் அந்த வீரர் வீற்றிருந்த காட்சி, ஒரு மாமலைச் சிகரத்தின் மீது கரியகொண்டல் ஒன்று தங்கியது போல் இருந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் சாலையின் இருபுறத்திலும் வந்து நின்றது போல் வல்லவரையனும் வந்து நின்று பார்த்தான். யானை மீது இருந்தவர் தான் பழுவேட்டரையர் என்பதை ஊகித்துக் கொண்டான்.

யானைக்குப் பின்னால் பட்டுத் திரையினால் மூடப்பட்ட சிவிகை ஒன்று வந்தது. அதற்குள் இருப்பது யாரோ என்று வல்லவரையன் சிந்திப்பதற்குள்ளே, செக்கச் சிவந்த நிறத்துடன் வளையல்களும் கங்கணங்களும் அணிந்த ஒரு கரம் சிவிகைக்குள்ளேயிருந்தது வெளிப்பட்டுப் பல்லக்கின் பட்டுத் திரையைச் சிறிது விலகியது. மேகத்தினால் மூடப்பட்டிருந்த பூரண சந்திரன் மேகத் திரை விலகியதும் பளீரென்று ஒளி வீசுவது போல் சிவிகைக்குள்ளே காந்திமயமான ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது.

பெண் குலத்தின் அழகைக் கண்டு களிக்கும் கண்கள் வல்லவரையனுக்கு உண்டு என்றாலும், அந்தப் பெண்ணின் முகம் பிரகாசமான பூரண சந்திரனையொத்த பொன் முகமாயிருந்தாலும் எக்காரணத்தினாலோ வல்லவரையனுக்கு அம்முகத்தைப் பார்த்ததும் உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்றவில்லை. இனந்தெரியாத பயமும் அருவருப்பும் ஏற்பட்டன.

அதே நேரத்தில் அந்தப் பெண்ணின் கண்கள் வல்லவரையனுக்கு அருகில் உற்று நோக்கின. மறுகணம் ஒரு பீதிகரமான பெண் குரலில் கிறீச் என்ற கூச்சல் கேட்டது உடனே சிவிகையின் பட்டுத் திரை முன்போல் மூடிக்கொண்டது.

வல்லவரையன் தன் அக்கம் பக்கத்தில் நோக்கினான். தனக்கு அருகில் எதையோ யாரையோ பார்த்துவிட்டுத்தான் அந்த மாது கிறீச் சிட்டு விட்டுச் சிவிகைத் திரையை மூடிக் கொண்டாள் என்று அவன் உள்ளுணர்ச்சி சொல்லிற்று. எனவே, சுற்றுமுற்றும் பார்த்தான். ஆழ்வார்க்கடியான் தனக்குச் சற்றுப் பின்னால் ஒரு புளிய மரத்தில் சாய்து கொண்டு நிற்பதைக் கண்டான். அந்த வீர வைஷ்ணவ நம்பியினுடைய முகம் சொல்ல முடியாத விகாரத்தை அடைந்து கோர வடிவமாக மாறியிருப்பதையும் பார்த்தான். வல்லவரையனுடைய உள்ளத்தில் காரணம் விளங்காத திகைப்பும் அருவருப்பும் ஏற்பட்டன.

## மூன்றாம் அத்தியாயம்

### விண்ணகரக் கோயில்

சில சமயம் சிறிய நிகழ்ச்சியிலிருந்து பெரிய சம்பவங்கள் விளைகின்றன. வந்தியத்தேவன் வாழ்க்கையில் அத்தகைய ஒரு சிறிய நிகழ்ச்சி இப்போது நேர்ந்தது. சாலையோரத்திலே நின்று பழுவேட்டரையரின் வரிவாரங்கள் போவதை வந்தியத்தேவன் பார்த்துக் கொண்டிருந்தான் அல்லவா? அவன் நின்ற இடத்துக்குச் சற்றுத் தூரத்திலேயே அவனுடைய குதிரை நின்று கொண்டிருந்தது.

பழுவேட்டரையரின் ஆட்களிலே கடைசியாகச் சென்ற சிலரின் பார்வை அக்குதிரை மீது சென்றது.

அடே! இந்தக் குரதையைப் பாரடா! என்றான் ஒருவன்.

குருதை என்று சொல்லாதேடா! குதிரை என் சொல்! என்றான் இன்னொருவன்.

உங்கள் இலக்கோண ஆராய்ச்சி இருக்கட்டும், முதலில் அது குரதையா அல்லது கழுதையா என்று தெரிந்து கொள்ளுங்கள்! என்றான் இன்னொருவன் வேடிக்கைப் பிரியன்.

அதையும் பார்த்து விடலாமடா! என்று சொல்லிக் கொண்டு, அந்த ஆட்களில் ஒருவன் குதிரையை அணுகி வந்தான். அதன் மேல் தாவி ஏற முறன்றான். ஏறப் பாக்கிறவன் தன் ஏஜமானன் அல்ல என்பதை அந்த அறிவுக் கூர்மையுள்ள குதிரை தெரிந்து கொண்டது. அந்த வேற்று மனிதனை ஏற்றிக் கொள்ள மாட்டேன் என்று முரண்டு பிடித்தது!

இது பொல்லாத குதிரையடா! இதன் பேரில் நான் ஏறக் கூடாதாம்! பரம்பரையான அரசகுலத்தவன்தான் இதன் மேல் ஏறலாமாம். அப்படியெல்லாம் தஞ்சாவூர் முத்தரையன் திரும்பி வந்துதான் இதன் மேல் ஏறவேண்டும்! என்று அவன் சமத்காரமாய்ப் பேசியதைக் கேட்ட மற்ற வீரர்கள் நகைத்தார்கள்.

ஏனென்றால், தஞ்சாவூர் முத்தரையர் குலம் நசித்துப் போய் நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது சோழர்களின் புலிக்கொடி தஞ்சாவூரில் பறந்து கொண்டிருந்தது.

குதிரையின் எண்ணம் அவ்விதம் இருக்கலாம். ஆனால், என்னைக் கேட்டால், செத்துப் போன தஞ்சாவூர் முத்தரையனைக் காட்டிலும் உயிரோடு இருக்கிற தாண்டவராயனே மேல் என்பேன்! என்றான் மற்றொரு வீரன்.

தாண்டவராயா! உன்னை ஏற்றிக் கொள்ள மறுக்கும் குதிரை நிஜக் குதிரைதானா என்று பார்த்துவிடு! ஒருவேளை, பெருமாளின் திருநாளுக்கு வந்த பொய்கால் குதிரையாயிருந்தாலும் இருக்கலாம்! என்றான் மற்றொரு பரிகாசப் பிரியன்.

அதையும் சோதித்துப் பார்த்து விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டு குதிரை மீது ஏறப்போன தாண்டவராயன் அதனுடைய வாலை முறுக்கினான். ரோஷமுள்ள அக்குதிரை உடனே பின்னங்கால்களை நாலு தடவை விசிறி உதைத்துவிட்டு ஓட்டம் பிடித்தது.

தொடரும் ....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாதனையில் சச்சின்

தனது நூறாவது சதத்தை நிறைவு செய்வதற்கு உடல் எடையில் 50 கிலோவை இழந்ததாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

ஆசியக் கிண்ண கிரிக்கட் போட்டியின் வங்கதேச அணிக்கு எதிராக போட்டியில் இந்தியா விளையாடியது.

முதலில் களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரரான சச்சின், தனது அதிரடியான ஆட்டத்தை ஆரம்பித்தார்.

இந்த ஆட்டத்தின் மூலம் ஆனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 100 வது சதத்தை சச்சின் இன்று நிறைவு செய்துள்ளார்.

இந்தியாவின் துடுப்பாட்டம் முடிவடைந்த பின்பு சச்சின் ஊடகங்களுக்கு பேட்டியளித்தார். அவர் கூறுகையில், இந்த சதத்தை எட்டுவதற்றகாக மனதளவில் பெரிதும் நெருக்கடிக்கு உள்ளானேன்.

எத்தனை சதம் அடித்தேன் என்பது பெரிதல்ல, நாம் செய்யும் பணியை தலை தாழ்த்தி நம் அணிக்காக உழைக்க வேண்டும் என்றார்.

சதம் குறித்த நான் கவலைப்பட்டதில்லை. ஊடகங்கள் தான் இதனை பெரிதாக விமரித்தன. இதனால் நான் எங்கு சென்றாலும் அனைவரும் எனது நூறாவது சதத்தை குறித்து கேட்க ஆரம்பித்தனர்.

ஆனால் இதுவரை நான் அடித்த 99 சதம் மேலும் இந்த மைல்கல்லை அடைவதற்காக கிட்டத்தட்ட 50 கிலோ அளவில் எடையை இழந்துள்ளேன் என்று நகைச்சுவையாக கூறினார்.

சதத்தை தாமதமாக எடுத்து குறித்து கேட்டபோது, இந்த ஆடுகளத்தில் பந்தை எதிர் கொள்வது மிகவும் சிரமமாக இருந்தது என்று தெரிவித்தார்.குறித்து யாரும் பேசவில்லை என்று கூறினார்.

உலக கிரிக்கட் ரசிகர்களின் ஆதரவை பெற்ற இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் படைத்த சாதனைகள் அளப்பரியது.

1989: பாக்கிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஸ்ரீகாந்த் தலைமையிலான இந்திய அணியில் 16 வயது சிறுவனாக அறிமுகம்.

1990: இங்கிலாத்துக்கு எதிரான ஓல்டு டிரபோர்டு மைதானத்தில் முதலாவது டெஸ்ட் சதம் (119ஓ)

1993: இந்திய மண்ணில் முதல் டெஸ்ட் சதம் (சென்னை, இங்கிலாந்துக்கு எதிராக 165)

1994: தனது 79வது போட்டியில் முதல் ஒருநாள் சதம் (கொழும்பில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பேட்டி, சிங்கர் கிண்ணம்)

1996: உலக கிண்ணப் போட்டியில் 2 சதம் உட்பட 523 ஓட்டங்கள்

1997: ஆண்டின் சிறந்த வீரராக விஸ்டன் இதழ் தெரிவு

1998: சென்னை டெஸ்டில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 155 ஓட்டங்கள் விளாசல். இந்தியா 179 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி

2001: ஒரு நாள் போட்டி வரலாற்றில் 10,000 ஓட்டங்கள் கடந்து சாதனை, 100 விக்கெட்டும் கைப்பற்றினார்.



2002: சர் பிராட்மேன் 29 சத சாதனையை சமன செய்தார் (மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக 117, போர்ட் ஆப் ஸ்பெயின்) அதே ஆண்டில் பிராட்மேன் சாதனையை முறியடித்தார். (இங்கிலாந்துக்கு எதிராக 193, லீட்ஸ்)

2003: ஐசிசி உலக கிண்ணப் போட்டியில் 673 ஓட்டங்கள் குவித்து புதிய சாதனை

2004: கவாஸ்கரின் 34 சத சாதனை சமன். எல்லா டெஸ்ட் அணிக்கு எதிராகவும் சதம் அடித்த 3வது வீரர் என்ற பெருமை (1. சிர்ஸ்டன், 2.ஸ்டீவ் வாஹ்) ஒருநாள் போட்டிகளில் 50 ஆட்ட நாயகன் விருது பெற்ற முதல் வீரர்)

தொடர்ச்சி 35ம் பக்கம் பார்க்க ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ŠYNAA®

## Herbal Black Henna

- All Natural Black Henna
- Ammonia Free
- Peroxide Free

For more information:
0784937020, 0777573099

என்றும் இளமை
நரைக்கான இயற்கைத்
தீர்வு




Marketed By:
Harcourts (Pvt) Ltd,
14, Station Road, Dehiwala.

Available at Fancy Shops & Harcourts Pharmacies Islandwide


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயினால் எவ்வாறு கண் பாதிக்கப்படுகிறது?



நீரிழிவு நோய் என்பது உங்கள் முழு சரீரத்தையும் பாதிக்கக்கூடியது கண்கள் உட்பட. கண்ணின் அருமை கண் இல்லாதவர்களுக்கு தான் தெரியும். அதனால் சிலர் இந்த நீரிழிவு நோயைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

நீரிழிவு நோயை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

1. நீரிழிவு நோயை இன்சுலின் மூலம் கட்டுப்படுத்துவது.

2. பொதுவாக நீரிழிவு நோய் என்பது 40 வயதிற்கு மேல் ஏற்படும்.

இருந்தும் இதில் சிலர் இன்சுலினை பாவிப்பார்கள். ஆனால் இவர்கள் இன்சுலினை நம்பி இருப்பவர்கள் அல்லர். மிகவும் வருந்தத்தக்க விடயம் என்னவென்றால் மிகவும் ஆபத்தான நீரிழிவு கண்களுக்குள் இருக்கும் சிறிய இரத்த நாளங்கள் பாதிப்படைந்து சில வேளைகளில் இரத்த நாளங்களில் அடைப்பு அல்லது கசிவு ஏற்பட்டால் உங்களுடைய பார்வை பாதிப்படையலாம். பின்வரும் சில அறிகுறிகள் மூலம் நீங்கள் எந்த வகையான நீரிழிவு நோயினால் பாதிப்படைந்துள்ளீர்கள் என்று அறியமுடியும்.

நீரிழிவு ரெடீனேபத்தி

இது தான் இன்று சாதாரணமாக உருவாகும் நீரிழிவு நோயாகும். சிலருக்கு சிறிது காலத்திற்கு நீரிழிவு நோய் இருந்தால் அது இந்த வகையாக தான் இருக்கும். இதில் திசுக்களில் இருக்கும் மிக சிறிய இரத்த நாளங்களில் சிறிது தாக்கம் ஏற்பட்டு இதனால் பாதிப்புக்குள்ளானவர்களின் பார்வை சிறிது மங்கலாம். அல்லது சிறிது கசிவு ஏற்படலாம் அல்லது ஒரு திரவக் கசிவு ஏற்படலாம். கண்மணிக்கு பாதிப்பு ஏற்படாத வரை உங்களுடைய பார்வை குறையாது. நோயாளர்களுக்கு எந்தவித மாற்றமும் தெரியாது.

## Proliferative Diabetic Retinopathy

நீரிழிவு ரெடீனோபத்தி கட்டுப்படுத்தாவிட்டால் அது திசுக்களில் உள்ள பெரிய இரத்த நாளங்களில் அடைப்புகளை ஏற்படுத்தும். இந்த அடைப்புகளினால் ரெட்டீன் பகுதிகளில் ஒக்சிஜனுக்கு தட்டுப்பாடு ஏற்படும். இது ஏற்பட்டால் திசுக்களில் புதிய நாளங்கள் வளர்ச்சி அடையும். இந்த நாளங்களானது ஒக்சிஜன் தட்டுப்பாடு ஏற்படும் இடங்களுக்கு மீண்டும் ஒக்சிஜனை பெற வழி செய்யும். ஆனால் இந்த புதிய இரத்த நாளங்கள் மிகவும் பலவீனமானவையும் தவறான இடங்களில் வளர்ச்சியடையக்கூடியன. இதன் காரணமாக இரத்த நாளங்களில் கசிவு ஏற்பட்டு பாரிய பிரச்சினைகளை கண்களில் தோற்றுவிக்கும். இந்த மாதிரியான நேரங்களில் கண்ணில் ஏற்படும் கசிவானது கண்மணியை மறைப்பதனால் உங்கள் கண்களில் பார்வை குறையலாம். குசிந்த இரத்தத்தை உறிஞ்சி எடுத்துவிட்டால் மீண்டும் உங்கள் பார்வை சீரான நிலைக்கு திரும்பும்.

## Maculopathy

இது ஏற்பட்டால் மைய பார்வை பாதிப்படைந்து இதனால் தூரத்தில் வருபவர்களின் முகத்தை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போய்விடும்.

## Temporary Blurring

உங்களின் உடலிலுள்ள சீனியின் அளவு ஏறி இறங்கும்போது உங்களின் கண்களைப் பாதிக்கும். பிரதானமாக உங்களின் நீரிழிவு நிலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காவிட்டால் இந்நிலை ஏற்படும். இந்த பார்வை குறைபாடானது தற்காலிகமானது.

## Cataract

உங்களுடைய விழிப் படலத்தில் வளர்ச்சியடையும் சவ்வினால் ஏற்படும் பிரச்சினை கற்றாக் எனப்படும். இதனால் உங்கள் பார்வை மங்கலடையும் காரணம் உங்கள் விழி படலத்தில் வளர்ச்சி அடையும் சவ்வினால். வெளிச்சம் உங்களது விழிகளுக்குள் செல்வதை தடை செய்கிறது. இதனால் உங்கள் பார்வை மங்கலாகும். இப்பொழுது ஒரு சிறிய அறுவை சிகிச்சை மூலம் இதை சரிசெய்து கொள்ளலாம்.

உங்களுடைய கண் சம்பந்தமான சிகிச்சையால் உங்களுக்குச் சாதாரண பரிசோதனை மூலம் உங்களுக்கு கண்டுபிடித்துக் கூறமுடியும். அதிகமான கண் சம்பந்தமான நோய்கள் ஏற்பட காரணம் நீரிழிவு தான். இதை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொண்டால் எந்த பாதிப்பும் இல்லை.



www.ataaspirations.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Vision Care Co-op office, Col 07**
T: +94 11 2681173 | 2681172 | 5334931
F: +94 11 2681173 | 5334928
info@visioncare.lk | www.visioncare.lk

**Jaffna Branch**
இல. 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 1808

Batticaloa (+94) 65 2226644 | Nuwara Eliya (+94) 52 2235650 | Trincomalee (+94) 26 2225530 |
Galle (+94) 91 2227997 | Jaffna (+94) 21 2221808 | Kurunegala (+94) 37 2230290 | Ratnapura (+94) 45 2225021 |
Weenappuwa (+94) 31 2245649 | Ja-Ela (+94) 11 2229989 |The Central Hospitals (+94) 11 2671003|
Anuradhapura (+94) 25 2226261 | Ceylinco Healthcare Centre (+94) 11 2336465 | Bandarawala (+94) 57 2222055|
Moratuwa (+94) 11 2647020

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நவீன சலீம் - அனார்கலி நாடகம்

'அனார் அனார் என் அன்பே அனார்!
மாசற்ற ஜோதி மலையே! பெண்ணின்
பெரும் பொருளே!பேரழகின் பிறப்பிடமே!
கவிஞரும் தொடுத்தெழுத முடியாத
காவியமே!காதலுக்கு ஒரு
எடுத்துக்காட்டே! என் கண்ணில் படாமல்
உன்னைக் கல்கொண்டு மூடினாரோ கல்லிலும்
வலிய மனமுடையோர். அனார் அனார்!!!!'

காட்சி ஒன்று: -
அக்பரின் தர்பார் மண்டபத்தில் அனார்கலி நடனமாடுதல். ஆட்டத்தைப் பார்த்திடாமல் ஆளையாளைப் பார்க்கிறார்
சலீம் - அனார் காதல் ஆரம்பம்.

அக்பர்: சபாஷ் அனார்!! அச்சா நடனம்.
அனார்: நமஸ்தே ஆலம்பனா !!

காட்சி இரண்டு: -
(பூஞ்சோலையில் அனார் - சலீம் சந்தித்தல்)

சலீம்: அன்பே அனார் நான் மனப்பூர்வமாக உங்களை நேசிக்கிறேன். என்காதலை ஏற்றுக்கொள் அனார்.

அனார்: நானும் தங்களை நேசிக்கிறேன். தாங்கள் யார் என எனக்குக் கூறவில்லையே!

சலீம்: நான் இந்நாட்டு பட்டாள வீரன். உன் நடனத்தில் லயித்து உன் அழகில் மயங்கி உன்னை மணம் செய்ய முடிவு செய்துள்ளேன். என் இதயம் உள்ளவரைக்கும் உன்னை மறவேன் அனார்.
(மந்திரி மான்சிங் மறைவிலிருந்து காண்கிறான்.) அக்பரிடம் முறையீடு செய்கின்றான்.

காட்சி மூன்று: -
(அக்பர் சலீமை அழைத்து புத்தி புகட்டல்)

அக்பர்: சலீம் காதல் செய்வதற்கு ஒரு தகுதியும் அற்ற நடனக்காரிதான் உனக்குக் கிடைத்தாளா? ஆவளை மறந்துவிடு இராச்சிய நன்மை கருதி.

சலீம்: தந்தையே! ஏன் உடலைத் துண்டம் துண்டமாக வெட்டிப் போட்டாலும் ஒவ்வொரு துண்டமும் அனார் அனார் என்று கூவித்தான் இறக்கும்.என் உயிரின் உயிரான அனார்கலியை ஏமாற்ற மாட்டேன். அனுமதி கொடுங்கள் தந்தையே.

அக்பர்: சலீம்! நீ அரசாள வேண்டிய இராசகுமாரன். சாதாரண நடனக்காரி -யை மகாராணியாக்க நான் உயிருடன் உள்ளவரையும் சம்மதியேன்.இன்றே மறந்து விடு அவளை.

சலீம்: என்தாயே சாதாரண நடனமாது தானே தந்தையே! என்னை ஆட்சேபிப்பதில் தங்கள் நீதி தர்மம் எங்கே!
அக்பர்: இது இராசநிபந்தனை. நான் ஒரு போதும் ஒப்பமாட்டேன்.

காட்சி நான்கு: -
(துன்பவியலுடன் திரும்பிய சலீம் பல நாட்களின் பின்னர் அனாரிடம் செல்லல்)

அனார்: ஏந்திளையைத் தவிக்க விட்ட இளவரசே! வருக வருக.


சலீம்: அனார் நாட்கள் தாமதித்து வந்தேன் என்று ஏளனம் செய்கிறாயா!

அனார்: இல்லை இல்லை. வீரக்கனலோடு வாள்தூக்கிப் போரிடும் பட்டாளத்து வீரனடி நான் என்று பொய் உரைத்து என்னை ஏமாற்ற எண்ணிய வீரத்தீரரே என்ன தயங்குகிறீர்கள்? உண்மை சுட்டுவிட்டதா?

சலீம்: இளவரசன் என்றால் பயந்து விடுவாய் என்றே பட்டாளத்து வீரன் என்றேன். பொறுத்தருள் அனார்.

அனார்: பயந்து விடுவேன் என்றல்ல மறுத்து விடுவேன் என்று. புதுமலரின் மது உண்டபின் கசக்கித் தூர எறிந்து விட நினைத்த வீரநடை போட்ட
கொடிய வேங்கையே உமது திட்டம் நிறைவேறு முன் தடைபோட்டு நிற்கிறதே மனம் ஏங்குகிறீரா? வீர நடைபோட்டு வந்த பேடியே! திரும்பி அணிநடைபோட்டுச் சென்று விடும்.


சலீம்: அனார் போதும் நிறுத்து. நான் என்ன சொல்லி வாதிட்டாலும் நம்பமாட்டாய். சலீம் வேங்கையுமல்ல வேசம் போடவுமல்ல. அனார் ஒருத்தியையே காதலிக்கின்றேன் என்ற உண்மையை அனார்கலியின் காலடியில் சலீம் பிணமாகக் கிடப்பது ஒன்றையே விரும்புகின்றேன் என்பதை இதோ என்வாளின் மூலம் செய்து காண்பிக்கிறேன். (சலீம் வாளால் தனது வயிற்றை நோக்கிக் குத்த முயலுதல்) பெண்கள் மனதாழம் காணமுடியாது. பாவம் நாட்டியக்காரி ஏமாற்றப் போறாளே! பழகி விட்டு மறுகணமே பத்தினி வேடம் போட்டுப் போலி வைராக்கியத்தை வெளிப்படுத்துவார்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



www.ataaspirations.com





**மறு ஒற்றன்:** சலீம் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன. நாம் அரச ஊழியம் பெறுகிறோம். கடமையைச் செய்வோம்.

காட்சி ஆறு: (அக்பர் சலீமை அழைத்து எல்லைப்போருக்கு அனுப்புதல்)

**அக்பர்:** சலீம் நீயே போரின் படைக்குத் தலைமை தாங்கி எல்லைப்போருக்குச் செல். வெற்றியுடன் திரும்பி வா.
(சலீம் போர்க்களத்தில் நெற்றியில் காயமடைதல். அரண்மனையில தலையில் கட்டுப் போடுதல்.அனார்கலி உயிருடன் சமாதி வைக்கப்பட்ட துன்பவியல் செய்தியறிந்து குதிரையில் சமாதியான இடத்திற்கு விரைதல்) குதிரையில் இருந்து விழுந்த காயத்துடன் சமாதியை அடைதல்.

சமாதி முன்பு

**சலீம்:** அனார் அனார் என் அன்பே அனார்! மாசற்ற ஜோதி மலையே! பெண்ணின் பெரும் பொருளே!பேரழகின் பிறப்பிடமே!கவிஞரும் தொடுத்தெழுத முடியாத காவியமே!காதலுக்கு ஒரு எடுத்துக்காட்டே! என் கண்ணில் படாமல் உன்னைக் கல்கொண்டு மூடினாரோ கல்லிலும் வலிய மனமுடையோர். அனார் அனார்!!!!

சிரித்துச் செழித்த உன் சிங்கார முகத்தை எரித்துக் கெடுக்கக்கூடாது என்று சமாதி கட்டினரோ கொடிய மனமுடையோர். நான் நாடாள வேண்டிய இராசகுமாரானாம். நீ காடாள வேண்டியவளாம். நான் நீந்தி விளையாடவா அதற்கு ஓர் நீரோடை. பட்டு விரித்த தரையில் பாதம் பட்டுவிட்டால் நோகுமோ எனக்கவலைப்படக் கணக்கற்றோர். மொட்டு விரித்த மல்லிகை நல்லதா முல்லை நல்லதா மஞ்சத்தில் பரப்ப என்று கவலைப்படுவோர் ஆயிரம். இத்தனை சுகமும் கிடைத்தென்ன. என் மனதில் விரும்பிய காதலி அனார்கலியை என் மனதில் விரும்பிய காதலி அனார்கலியை அடையமுடியாத இந்தப் பாவிக்கு இராச்சியம் தான் ஏன்! எடுபிடி அம்பு ஆயுதங்கள் தான் ஏன் ஏன் ஏன்!!! அனார் உன் முத்துப்பற்களின் மோகனச் சிமிழ் சிரிப்பு எங்கே! காந்தக் கண்களின் கடைவிழிப்பார்வை  விழிப்பார்வை

எங்கே? கனிந்த அல்லியுடன் பூச்சரம் தொடுத்து உன் பொன்மேனியில் நான் அணிந்தபோது மந்த காசம் செய்து பட்டிலும் மென்மையான பவள இதழ்களால் சிந்திய உன் புன்சிரிப்பு எங்கே? எங்கே? பொன்னுக்காகக் காதலை விலை பேசமாட்டேன் என்று வழக்காடிய உன் செவ்விய நா எங்கே? என்னை மகிழ்விக்க விதம் விதமாக உடைதரித்து மாறுவேடம் பூண்டு ஏமாற்றுவாயே! நான் திகைத்து நின்றபோது உன் கன்னங்களை உப்பி அன்பு முத்தங்கள் கேட்பாயே! எங்கே என் உயிரே அந்தக் கனிந்த கன்னங்கள்? என் அன்புக்காதலியே எவ்வளவு எண்ணங்களை ஆசைகளைக் காதலையே மூலதனமாக வைத்து உன் நெஞ்சில் தேக்கி அழுது கலங்கியிருப்பாய்!! ஐயகோ! இது என்ன கொடுமை!

என் தந்தையின் கொடிய தண்டனை மனுநீதியா–னதா?  ஏய் என் விதியே அதர்மத் தீர்ப்பளித்த என் தந்தை அக்பரின் ஆட்சி அழியட்டும். என் புனிதக் காதலியின் புகழ் ஓங்கட்டும்.  அனாரின் ஆத்மா சாந்தியடையட்டும். என் உயிரின் உயிர் அனார்கலியின் இதயத்தை விழுங்கி ஏப்பமிட்ட கல்லறையே! பேசு! நீ வழங்கிய தீர்ப்பு நீதியானதா? சொல் நீ பேசமாட்டாய். நீயோ கல்லு. அன்பு இதயங்களைப்பிரித்து அவர்கள் இரத்தங்களை உறுஞ்சிக் குடிக்கத்தான் உனக்குத் தெரியும். இதோ உனக்குப் பழக்கமான அந்த வேலையைச் செய். என் குருதியையும் அனாரின் இரத்தத்துடன் ஒன்று சேர்.

அனார்! அனார்! என் அன்பே
(சமாதியில் தலையை மோதி இறத்தல்)
(பின்னணியில்)

**அனார்கலி அனார்கலி அனார்கலி அன்பு மாருத**
**சலீம் கரத்திலே பண்பு மாறாமல் தவழ்ந்தாய். பாழும்**
**பாதுகூஷாவின் இரு கரங்களால் நீயும்**
**சமாதியடைந்தாய்! சாகாத உன் மேனி சாவாதோ!**
**சலீம் என்ற நினைவோடு நலிவானதோ!**
**பகையாளர் பசிக்கே நீ பலியாகினாய்**
**பாசத்தின் நிலவே நீ இன்று புகழ் காவினாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோக்ஸ்

'எப்படியாவது என்னைக் காப்பாந்துங்க டாக்டர்'
'எல்லாரும் இதையே சொன்னா,
நான் யாருக்குத்தான் ஆப்பரேசன் பண்ணுறது.'

---

'பொண்ணுக்கு மாப்பிளைய பிடிக்கல்ல...
கிளம்புங்கோ..!'
'கொஞ்சம் இருங்கோ ...
மாப்பிளைக்கு பஜ்ஜி பிடிச்சிருக்கு
சாப்பிட்டுட்டுக் கிளம்பறோம்!'

---

'டாக்டர்.... பிளாஸ்ரிக் சர்ஜரி செய்ய
எவ்வளவு செலவாகும்'
'20 லட்ச ரூபாய் ஆகும்...'
'ஒரு வேளை நாங்களே பிளாஸ்டிக்கை
கொண்டுவந்துட்டா எவ்வளவு குறைப்பீங்க..?'

---

'கல்யாணத்துக்கு முன்னால எதுக்காக
மாப்பிள்ளையை கார்லயும் குதிரையிலயும்
கூட்டிட்டுப் போறாங்க?'
'கடைசியாக தப்பிச்சு போக
ஒரு சான்ஸ் கொடுக்கத்தான்.!'

---

"தலைவரோட அமெரிக்கா போயிருந்தியே..
'நயாகரா' பார்த்தியா?"
"தலைவர் 'வயாகரா' சாப்பிட்டதைத்தான்
பார்த்தேன்....!"

இன்றைய இளம் பெண்களின் விருப்பு வெறுப்பு சிந்தனை

இம்முறை லாடு லபக்கு தாஸிடம் இன்றைய பெண்களைப் பற்றி ஏதேனும் சொல்லுங்களேன் என்று கேட்டதிற்கு மிகவும் உற்சாகமாக எழுந்திருந்து முழங்கத் தொடங்கினார் ஒரு முழக்கம்.... அவற்றுள் மின்னிய வினாக்களையும் முழங்கிய விடைகளையும் இங்கே தருகிறோம்...



# கலக்கல் ஓசை

1. இன்றைய பெண்களின் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்??

அங்க ஒரு பருப்புமில்ல.... இதெல்லாம் எப்பவோ ஒரு காலத்தில வேலையில்லாத பெண்டுகள் தங்களுக்குத் தாங்களே வைத்திருந்த நிலைமை.இப்ப இதுகளுக்கு கயளாமைெ
லெவல் ஆணவம் தலைக்கனம் திமிர் எல்லோ கூடிருக்கு..

2. இன்றைய பெண்களின் ஆடை அலங்காரங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அந்தக் காலத்தில பாருங்கோ பெண்டுகள் சாரி கட்டினா பத்து தரம் இழுத்து இழுத்து விடுவினம்.எங்காவது தங்கட அழகிய உடம்பின் பாகங்கள் ஏதும் தெரியுதோ என்ற
சங்கடத்தில்.இண்டைக்கும் இந்த பெண்டுகள் பத்து தரம் இழுத்து இழுத்து தான் விடுகிறாக. ஏனெண்டு பார்த்தா எங்கையாவது தங்கட உடம்ப மறைச்சு உடுத்துப்போட்டோமோ என்ற
சந்தேகத்தில்.இடுப்புக்குக் கீழே சாரியை இழுத்து விட்டு விட்டு பிறகு முதுகையுமெல்லோ ஓ கட் எடுக்கினமாம். சாரிக்கே இந்த நிலையெண்டா மற்ற உடுப்புக்கள் பற்றி சொல்லத் தேவையில்லை தானே..

3. பெண்கள் தமது கணவருக்கு கொடுக்கிற மரியாதை எப்படி இருக்கிறது??
ஆஹா அருமையான கேள்வி!! விதானையாரிட்ட கார்ட் பதியப்போய் விதானையார் மனுசன்ட பெயரைச் சொல்லுங்கோ எண்டு கேட்டா அந்தக் காலத்துப் பெண்டுகள் 'இவர்தான்'எண்டு கணவனின் பெயரைச் சொல்ல முடியாது நிப்பினம். இப்ப என்னண்டா அடிக்கொரு தடவை மனுசன்ட பெயரை சொல்றதோட மட்டுமில்லாம 'டா'போட்டுமெல்லோ கூப்பிடுகினம்.கேட்டா அன்பில கூப்பிடுகினமாம்.

4. இன்றைய பெண்களின் சமையல் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்????

அந்தக் காலத்தில பெண்டுகள் சமைக்க முந்தியே நாக்கு ஊறிவிடும்.இப்ப என்னெண்டா சமைக்க முன்னரே இண்டைக்கு சாப்பாடு வெளியில எடுப்பம் அப்பா எண்டுவினம்.அவனும் கருக்கலோட சாப்பிடுவதை விட கடையில எடுக்கிறது மேல் எண்டு ஆமோதிப்பான்.தன்ர மனுசனுக்கு தன்ர கையால சமைச்சு போடவேணும் என்று நினைச்ச காலமெல்லாம் அந்தக்காலம் பாருங்கோ...

5. இந்தக் காலத்துப் பெண்களின் அழடிடைந போன் பயன்பாடு பற்றிக் கூறமுடியுமா?

அத ஏன் கேக்குறியள்..ஏதோ இந்த வயரில்லாத தொலைபேசியைத் தூக்கிக் கொண்டு அம்மா நான் புசழரிளுவரனைள இல் இருக்கிறன் எண்டுவிட்டு தியேட்டரில குரூப்பாக இருந்து படம் பார்க்கிற இந்த பெண்டுகள் தங்களையும் ஏமாத்தி தங்கட தாய் தகப்பனையுமெல்லோ ஏமாத்துதுகள்.

6. பெண்களின் தற்போதைய காதல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்???

வந்திட்டியள் சரியான இடத்துக்கு.3 மாதம் 6 மாதம் எண்டு யபசநநஅநவெ போட்லோ காதலிக்குதுகள்.கேட்டா ஒரே ஆளோட சலிச்சுப் போடுமெல்லோ எண்டு சொல்லிட்டு நாங்கள் டநபயட ஆகத் தானே வஅைந போட்டுக் காதலிக்கிறம் எண்டுதுகள்.எங்கட பண்பாடு பழக்கவழக்கத்த பத்திக் கேட்டா இதென்ன பட்டிக்காட்டு பழக்கம்..இன்னும் நீங்க திருந்த வில்லையா எண்டெல்லோ கேட்குதுகள். நல்ல பெண்பிள்ளைகளை நல்ல தாய்மாரை நான் குறை சொல்லயில்லை..இதுகளிண்ட பெயரைக் கெடுக்கிறதுக்கெண்டே சிலதுகள் இருக்குத்தானே அதுகளப் பத்தித் தான் நான் சொல்லுறன்.

## ஜோக்கூ

எங்களுக்காய்
வாயிலிருந்து
லிங்கத்தை எடுத்தார் ...
குங்குமத்தை எடுத்தார் ...
விபுதியை எடுத்தார் ....

ஜயகோ!
எங்களால்
அவரை
ஜாமீனில்
எடுக்க முடியவில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2005: தனது 122வது டெஸ்டில் 10,000 ஓட்டங்களை கடந்து சாதனை மைல் கல்லை எட்டினார்.

2006: ஒருநாள் போட்டிகளில் 14,000 ஓட்டங்களை கடந்து சாதனை.

2007: 400வது சர்வதேச ஒருநாள் போட்டியில் பங்கேற்பு

2008: அவுஸ்திரேலியாவிற்கு எதிரான முத்தரப்பு தொடரின் போது ஒருநாள் போட்டிகளில் 16,000 ஓட்டங்களை கடந்தார். பிரையன் லாராவின் 11,953 ஓட்டங்களை கடந்து டெஸ்ட் ஓட்டக் குவிப்பில் முதலிடத்துக்கு முன்னேறினார்.

2009: ஒருநாள் போட்டிகளில் 17,000 ஓட்டங்களை கடந்து சாதனை.

2010: ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதம் விளாசிய முதல் வீரர் என்ற மகத்தான சாதனை. அதிகடெஸ்ட் போட்டிகளில் களமிறங்கிய வீரராகவும் சாதனை (ஸ்டீவ் வாஹை முந்தினார் 163)

2011: அதிக ஒருநாள் போட்டிகளில் களமிறங்கிய வீரர் என்ற பெருமை (ஜெயசூரியாவை முந்தினார் 444)

2011: இந்திய அணி 2வது முறையாக உலக கிண்ணத்தை வென்றதில் முக்கிய பங்காற்றினார். இந்திய அணியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரராக (482) பெருமை.

2012: ஆசிய கிண்ணப் போட்டியில் வங்கதேசத்துக்கு எதிரான லீக் ஆட்டததில் 100வது சர்வதேச சதம் விளாசி உலக சாதனை.

## பார்சிலோனாவுக்காக அதிக கோல்கள் அடித்து லயனல் மேசி வரலாற்று சாதனை

பார்சிலோனா அணிக்காக 234 கோல்கள் அடித்த லயனல் மேசி அந்த அணிக்காக அதிக கோல் அடித்த வீரர் வரலாற்று பெருமையை பெற்றார்.

லாலீகாவில் நேற்று பார்சிலோனா கிரனாடா அணியை எதிர்கொண்டது. இந்த போட்டியில் பார்சிலோனா 5 – 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் லயன்ஸ் மேசி அடித்த ஹாட்ரிக் கோல்களும் அடங்கும். இதுவரை பார்சிலோனாவுக்காக 234 கோல்களை லயனல் மேசி அடித்துள்ளார். இதன் மூலம் பார்சிலோனா அணிக்காக விளையாடியுள்ள வீரர்களில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற புதிய பெருமையை லயனல் மேசி பெற்றார்.

இதற்கு முன் பார்சிலோனா ஜாம்பவான் செசாரே ரோட்ரிகஸ் 232 கோல்கள் அடித்திருந்ததே அதிகபட்ச சாதனை. இவர் 1940 முதல் 1950 வரை பார்சிலோனாவுக்காக விளையாடியவர். கடந்த 1995ம் ஆண்டு செசாரே ரோட்ரிகஸ் 74வது வயதில் மரணம் அடைந்தார். முன்னதாக செசாரே ரோட்ரிகஸ் 235 கோல்கள் அடித்திருந்ததாக நம்பப்பட்டது. ஆனால் யூபா மற்றும் பார்சிலோனாவின் பல்வேறு ஆவணங்கள் மூலம் ரோட்ரிகஸ் 232 கோல்கள் அடித்திருந்ததே உறுதி செய்யப்பட்டது. இதை தொடர்ந்தே லயனல் மேசியின் சாதனையை பார்சிலோனா உலகுக்கு அறிவித்தது.

லயனல் மேசியின் சாதனை குறித்து பார்சிலோனா பயிற்சியாளர் பெப் கார்டியாலா, 24 வயதிலேயே மேசி இந்த அரிய சாதனையை படைத்துள்ளார். இன்னமும் அவர் பல சாதனைகள் நிகழ்த்துவார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

## கால்பந்து மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் லயனல் மேசி முதலிடம்

கால்பந்து மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் பட்டியலில் லயனல் மேசி முதலிடம் பிடித்தார்.

கடந்த 2011ம் ஆண்டில் கால்பந்து மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களின் பட்டியலை பிரான்ஸ் புட்பால் மேகசின் வெளியிட்டது. இதில் பார்சிலோனாவின் அர்ஜென்டினா ஸ்டிரைக்கர் லயன்ல் மேசி 33 மில்லியன் யூரோ வருமானத்துடன் முதலிடம் பிடித்துள்ளார். நீண்ட காலமாக இந்த பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்த இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் டேவிட் பெக்காம் 2வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். தற்போது லாஸ் ஏஞ்சல்ஸ் கேலக்சிக்காக விளையாடி வரும் பெக்காமின்



கடந்த ஆண்டு வருமானம் 31.5 மில்லியன் யூரோ ஆகும்.

ரியல்மாட்ரிக் சூப்பர் ஸ்டார் கிறிஸ்டியானோ ரொனால்டோ 29.2 யூரோ வருமானத்துடன் 3வது இடத்தில் உள்ளார். பார்சிலோனாவில் இருந்து ரஷ்யாவின் ஆன்ஷ்கி மக்கச்சலே அணியில் இணைந்த காமரூன் ஸ்டிரைக்கர் சாமுவேல் ஈடோவுக்கு 4வது இடம் கிடைத்துள்ளது. இவரது கடந்த ஆண்டு வருமானம் 23.3 மில்லியன் யூரோ. இந்த பட்டியலில் இத்தாலி சீரி 'ஏ'வை சேர்ந்த ஒரு வீரர் கூட முதல் 10 பேரில் இடம் பெறவில்லை.

பயிற்சியாளர்கள் பட்டியலில் ரியல்மாட்டரிட்டின் ஜோஸ் மோரின்ஹோ 14.8 மில்லியன் யூரோ வருமானத்துடன் முதலிடம் பெற்றுள்ளார். சமீபத்தில் பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் அணியில் இணைந்த கார்லோ அன்சாலட்டி 13.5 மில்லியன் யூரோவுடன் 2வது இடத்திலும் பார்சிலோனா பயிற்சியாளர் பெப் கார்டியாலா 9.5 மில்லியன் யூரோ வரமுானத்துடன் 3வது இடத்திலும் உள்ளார்.

அதிகம் சம்பாதிக்கும் முதல் 10 வீரர்கள்

லயனல் மேசி – பார்சிலோனா – 33 மில்லியன்
டேவிட் பெக்காம் – கேலக்சி – 31.5 மில்லியன்
ரொனால்டோ – ரியல்மாட்ரிட் – 29.2 மில்லியன்
சாமுவேல் ஈடோ – ஆன்ஷ்கி – 23.3 மில்லியன்
ரூனி – மாண்செஸ்டர் சிட்டி – 20.6 மில்லியன்
அகுவாரா – மான்செஸ்டர்சிட்டி – 18.8 மில்லியன்
யாயாடோர் – மான்செஸ்டர்சிட்டி – 17.6 மில்லியன்
பெர்னான்டோடார்ரஸ் – செல்சி – 16.7 மில்லியன்
காகா – ரியல்மாட்ரிட் – 16.5 மில்லியன்
பில்ப் லாம் – பேயர்ன்மியூனிச் – 14.3 மில்லியன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STUDY & WORK in UK NEW ZEALAND LITHUANIA

City & Guilds Approved Centre



OUR SERVICE ABSOLUTELY FREE

ஆகக் குறைந்த கல்வித் தகைமை

GCE O/L 6 PASSES

எமது சேவை முற்றிலும் இலவசம்

HOTLINE : 077 6874576

TIER 4 (CHILD) STUDENT

பிள்ளைகளுடன் பெற்றோரும் UK செல்லக்கூடிய அரிய வாய்ப்பு

No Need IELTS

ATA Aspirations (Pvt) Ltd

No.122/B, Galle Road, Dehiwala South, Colombo, Sri Lanka.
Tel: 011 272 2990, 011 720 7989 M: 077 4939756
Email: info@ataaspirations.com Web: www.ataaspirations.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org